தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

ஏற்றம்

விலை ரூ.15– மலர் 21–இதழ் 08–டிசம்பர் 2019

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள்..!

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் சிறப்பம்சங்கள்..!

திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர் (பொ)

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

முதன்மை செயல் அலுவலர்,

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

டிசம்பர் 2019

அன்பு சகோதரிகளே,

சுய உதவிக் குழு மகளிரின் செயல்பாட்டையும், அவர்களின் வெற்றிகளையும் மாதந்தோறும் வெளியிட்டு வரும் முற்றம் இதழின் வாயிலாக உங்களை சந்திப்பது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கமே மக்களாட்சியாகும். பாராளுமன்றம், சட்டமன்றம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் உரிமை நமக்குள்ளது. அதன்படியே இதுவரை நடைபெற்ற தேர்தல்களில் நம் பிரதிநிதிகளை ஜனநாயக முறையில் தேர்வு செய்து வருகிறோம். தற்போது நம் மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெற அறிவிக்கப்பட்டு, அதற்கான செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அதிக கிராமங்கள் கொண்ட நம் நாட்டில் உள்ளாட்சி என்பது மிக முக்கியமான ஒன்றாகும். நகரங்கள் மற்றும் கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளான சாலை, குடிநீர், தெரு விளக்கு, சுகாதாரம் போன்றவற்றை நிறைவேற்றித் தரும் அமைப்புகளாக உள்ளாட்சி அமைப்புகள் உள்ளன. தூய்மை இந்தியா திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியதில் இந்திய அளவில் சிறந்த மாநிலமாக நம் தமிழ்நாடு தேர்வு பெற்றுள்ளதற்கு நமது உள்ளாட்சி அமைப்புகளின் அயராத செயல்பாடும் கடின உழைப்பும் முக்கிய காரணமாகும்.

வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கேற்ப உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் மாபெரும் பொறுப்பு உள்ளாட்சி அமைப்புகளுக்கு உள்ளன. சிற்றூராட்சி முதல் பெருமாநகராட்சி வரை உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் சிறப்பான செயல்பாட்டிற்கு அதன் உறுப்பினர்கள் முக்கியமானவர்கள். சுயநலமின்மை, சகிப்புத் தன்மை, நேர்மை போன்ற குணநலன் மிக்கவர்களால் உள்ளாட்சி நல்லாட்சி தரும் அமைப்பாகத் திகழும். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த அமைப்புகளின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் மாபெரும் பொறுப்பு நமக்குள்ளது என்பதை நாம் நினைவில் கொண்டு செயல்பட வேண்டும்.

நாட்டிற்கு நன்மை செய்யும் நபர்களைத் தேர்ந்தெடுத்திடும் கருவியாக உங்கள் வாக்கு உள்ளது என்பதை கவனத்தில் கொண்டு, இன, மொழி, சாதி, சமய வேறுபாடின்றி நாட்டு நலனே முக்கியம் என்ற குறிக்கோளுடன் தன்னலமின்றி தகுதியான நபர்களைத் தேர்ந்தெடுக்க உங்களின் வாக்குகள் பயன்பட வேண்டும்.

வாக்களிப்பது நமது கடமை என்ற உணர்வுடன் சுய உதவிக் குழு மகளிர் செயல்பட வேண்டும். உங்கள் பகுதியில் நடைபெறும் தேர்தல் அமைதியாக நடைபெறவும், 100 சதவிகிதம் முழுமையான வாக்களிப்பு நடைபெறவும் சுய உதவிக் குழு மகளிரான உங்களின் பங்களிப்பு முக்கியமாக இருக்க வேண்டும். நீங்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டி என்பதை மீண்டும் நிரூபிக்க இதை ஒரு வாய்ப்பாகக் கருதி செயல்பட வேண்டும் என உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், நம் மாநிலத்தில் தற்போது அதிகமான அளவு மழைப்பொழிவு ஏற்பட்டுள்ளதால், குளம், குட்டை, ஏரி, அணை என அனைத்தும் வேகமாக நிரம்பி வருகின்றன. ஆறுகளிலும் கால்வாய்களிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. வான் தரும் கொடையான மழை நீரை சேகரித்து வைத்தால் அடுத்து வரும் கோடைக்காலத்திற்கான தண்ணீர் தேவையை பெருமளவில் சமாளிக்க முடியும். எனவே உங்கள் பகுதியில் மழைநீரை சேமிக்கும் முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். மழை நீர் கால்வாய்கள், ஏரி, குளம், குட்டை போன்றவற்றின் பராமரிப்பில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். உங்களின் செயல்பாடுகள் மற்றவர்களையும் செய்யத் தூண்டும் அளவிற்கு இருக்கச் செய்வதே சாலச்சிறந்தது.

எனவே சுய உதவிக் குழு மகளிரான நீங்கள் நாட்டுப்பற்று மிக்கவர்கள் என்பதை மற்றவர்கள் உணரும் உன்னத தருணமான இத்தகு செயல்பாடுகளில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அனைவருக்கும் கிருஸ்துமஸ் மற்றும் ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

ச.ப.கார்த்திகா

மேலாண்மை இயக்குநர் (பொ)

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் | wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

protncdw1@gmail.com

குறளும்-பொருளும்

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது

பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவரைப்
பசியென்னும் தீயநோய் தீண்டுவதில்லை.

உள்ளே...

'மனம் இனிது'-மனநலத் திட்டம் குறித்த பயிற்றுநர்களுக்கான பயிற்றுநர் பயிற்சி 05

மாதிரி கிராம ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் அடிப்படை விவரங்களை சேகரிப்பதற்கான பயிற்சி 07

இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பினை பெருக்கிட ஒப்பந்தம் 08

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை கர்நாடக மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுவினர் பார்வையிடல் 09

புதியதாக தேர்வு செய்யப்பட்ட உதவி திட்ட அலுவலர்களுக்கான பயிற்சி 10

வாக்களிப்போம்...! வளம் பெறுவோம்...! 11

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு 13

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணை வழங்குதல் 14

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 22

முற்றக் கச்சேரி 24

➜ முற்றம் வாசகர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

அச்சு மற்றும் வெளியீட்டு செலவினங்கள் அதிகரித்துள்ள காரணத்தினாலும், தற்போது மாறிவரும் சூழலுக்கேற்ப முற்றம் இதழை புதிய தொழில்நுட்ப வடிவில் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ள காரணத்தினாலும் சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாக விளங்கி வரும் நமது முற்றம் இதழின் விற்பனை விலை மற்றும் ஆண்டு சந்தா கட்டணங்கள் வருகிற 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்பட உள்ளது என்பதை அனைத்து முற்றம் வாசகர்களுக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்றம் இதழின் தனிப்பிரதி / சந்தா விபரம்	தற்போதைய விலை	ஜனவரி 2020 முதல் மாற்றம் செய்யப்படவுள்ள புதிய விலை	ஜனவரி 2020 முதல் முற்றம் வாசகர்களுக்கான சலுகை விலை
முற்றம் இதழின் தனிப்பிரதி	ரூ. 15	ரூ. 20	ரூ. 20
ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180	ரூ. 240	ரூ. 200 (தள்ளுபடி ரூ. 40)
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360	ரூ. 480	ரூ. 400 (தள்ளுபடி ரூ. 80)
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540	ரூ. 720	ரூ. 600 (தள்ளுபடி ரூ. 120)

முற்றம் இதழின் வாசகர்கள் அளித்து வரும் தங்களின் ஆதரவினை இவ்இதழுக்குத் தொடர்ந்து வழங்கி உற்ற தோழியாய், உறுதுணையாய் என்றும் இருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

– முற்றம் இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

மலர் 21
இதழ் 08
டிசம்பர் 2019
விலை ரூ.15

- **கௌரவ ஆசிரியர்கள்**

திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர் (பொ),
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்**

எஸ். சின்னப்பன், செயலர், முற்றம்

- **ஆசிரியர் குழு**

கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

பா. செல்வராஜன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜி. சரஸ்வதி கணேசன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சி. கே. வீரணன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

- **நிர்வாக ஆசிரியர்**

ச. சந்தோஷினி சந்திரா, பொது மேலாளர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **நிதி நிர்வாகம்**

அ. நிருபா ராணி, நிதி ஆலோசகர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்**

கூ. பாபு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **துணை ஆசிரியர்: ஏ. கண்ணன்**
- **முதுநிலை கணக்காளர்: சு. சசிகலா**
- **பிழை திருத்துபவர்: எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
- **கணினி வடிவமைப்பு: டி. ராஜரத்தினம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'முற்றம்', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை 600 034.

தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

நீரை காக்கும் தொழில்நுட்பம்

அன்புள்ள வாசகர்களுக்கு,

மார்கழி மாதம் என்றாலே ஒரு மகிழ்ச்சியான மாதம் என்றே கூறலாம். பருவ மழை படிப்படியாகக் குறைந்து குளிர்காலம் தொடங்கும் மாதம். நீர் நிலைகள் நிரம்பி பனிபெய்ய தொடங்கும் காலம். இந்த ஆண்டு தமிழகத்தில் பரவலாக மழை பெய்ததால் மக்கள், குறிப்பாக விவசாய பெருமக்கள் சற்று ஆறுதல் அடைந்துள்ளனர்.

ஒரு சில மாவட்டங்களில் போதிய அளவு மழை பெய்யாவிட்டாலும் மற்ற பகுதிகளில் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் ஏரிகள், குளங்கள் மற்றும் அணைகள் யாவும் நீர் நிரம்பியிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. இந்த மகிழ்ச்சி அடுத்துவரும் பருவ மழைகாலம் வரை நீடித்திருப்பது மக்களாகிய நமது கைகளில்தான் உள்ளது. குறுகிய காலத்தில் கிடைத்த இந்த மழை நீர் முழுவதும் சேர்த்து வைக்கப்பட வேண்டும். பாசனத்திற்கும், குடிநீருக்கும், வீட்டு உபயோகத்திற்கும் மழை நீரை அறுவடை செய்து சேமித்து வைப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு உங்களின் முழு ஒத்துழைப்பும் தர வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர் சேகரிப்பு தொட்டி உருவாக்க வலியுறுத்தியதால், பெரும்பாலானோர் தங்களின் வீடுகளில் மழைநீர் சேமிப்பு அமைப்புகளை உருவாக்கி வருகின்றனர். இது பாராட்டுக்குரிய செயலாகும். தற்போது நுண்நீர் பாசன முறையை அறிமுகம் செய்து அதற்கான மானியமும் அறிவிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் பலரும் நுண்நீர் பாசனத்திற்கு மாறி வருகின்றனர். வருங்காலங்களில் பருவநிலை மாற்றத்தால் பெரும் சிரமங்கள் உருவாக வாய்ப்புள்ளது. இந்த பருவநிலை மாற்றத்திற்கேற்ப நாம் நம்மை தயாரித்துக் கொள்ள வேண்டியது இன்றைய காலகட்டத்திற்கு இது அவசியமான ஒன்றாகும். இப்பணியை செய்வதற்கு சுய உதவி குழுக்கள் தூண்டுகோலாய் இருக்க வேண்டும்.

உங்கள் கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு இந்த நுண்நீர் பாசனத்தைப் பற்றியும், அதற்கு அரசு வழங்கும் சலுகைகள் பற்றியும் எடுத்துக் கூறுங்கள். அனைத்து வீடுகளிலும் மழை நீர் சேகரிப்பு தொட்டிகளை உருவாக்குவதற்கு உதவி செய்யுங்கள். பயன்படுத்திய நீரை மறுசுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்துவதற்கு கற்றுக் கொடுங்கள். நீர் நிலைகள் ஆக்கிரமிப்பை அகற்றும் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருங்கள். இதனால் விவசாய உற்பத்தி பெருகும். நிலத்தடி நீர் உயரும். சமுதாயத்தின் நலமும் காக்கப்படும் என முற்றத்தின் சார்பாக அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

எஸ். சின்னப்பன்
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பணியாளர்கள் மற்றும் சமுதாய வளப் பயிற்றுநர்களுக்கான 'மனம் இனிது'-மனநலத் திட்டம் குறித்த பயிற்றுநர்களுக்கான பயிற்றுநர் பயிற்சி

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் / தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் சார்பாக, இயக்கப் பணியாளர்கள் மற்றும் சமுதாய வளப் பயிற்றுநர்களுக்கு 'மனம் இனிது' – மனநலத் திட்டம் குறித்து பயிற்றுநர்களுக்கான பயிற்றுநர் பயிற்சி, சென்னை மனச்சிதைவு ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து 2019 நவம்பர் மாதம் 25 முதல் 29 வரை சென்னை, நந்தம்பாக்கம், ICSA (இக்ஷா) பரிபூரணா மையத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாநில இயக்க மேலாண்மை அலகின் அலுவலர்கள், கடலூர், திருச்சி, தஞ்சாவூர், சேலம், ஈரோடு, இராமநாதபுரம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் இருந்து உதவித் திட்ட அலுவலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டார மேலாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், சமூக வளப் பயிற்றுநர்கள் மற்றும் மாவட்ட அளவிலான முதன்மை பயிற்றுநர்கள் பங்கேற்பாளர்களாகக் கலந்து கொண்டனர். இப்பயிற்சியினை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். முன்னதாக பயிற்சியில் கலந்து கொள்ள வருகை புரிந்த பங்கேற்பாளர்களை டி.என்.வி.ஆர்.சி.யின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. தீபா ராஜ்கமல் அவர்கள் வரவேற்றார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு) / டி.என்.வி.ஆர்.சி.யின் செயலாளர் திருமதி. சரஸ்வதி கணேசன் அவர்கள், சென்னை மனச்சிதைவு நோய் ஆராய்ச்சி மையத்தின் துணைத்தலைவர் டாக்டர். தாரா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மனம் இனிது பயிற்சியில், மனம் என்றால் என்ன? ஆரோக்கியமான மன நலத்திற்கான வழிமுறைகள், மனச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவரை கண்டறியும் முறைகள், மிதமான மனநோய், தீவிர மனநோய், மனநலம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திடத் தேவையான நடவடிக்கைகள் போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் சென்னை மனச்சிதைவு ஆராய்ச்சி மையத்தின் கருத்தாளர்களும் மற்றும் மன நல நிறுவனத்தின் (IMH) கருத்தாளர்களும் பங்கேற்பாளர்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறினர். இப்பயிற்சியின் ஒரு பகுதியாக சென்னையில் உள்ள மனநலம் நிறுவனத்திற்கும், ஸ்கார்ப் மனச் சிதைவு ஆராய்ச்சி மையத்திற்கும் பட்டறிவுப்

பயணமாக பங்கேற்பாளர்கள் சென்று வந்தனர். இப்பயிற்சியின் நிறைவு நாளன்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் (கூடுகை மற்றும் கூட்டாண்மை) திரு. சி. கே. வீரணன் அவர்கள் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு வாழ்த்து களைத் தெரிவித்தார்.

இப்பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் – சென்னை சிறப்பாக செய்திருந்தது.

மாதிரி கிராம ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் அடிப்படை விவரங்களை சேகரிப்பதற்கான பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் கடலூர், தஞ்சாவூர், ஈரோடு, சேலம் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள கிராம ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மாதிரியாகக் கொண்டு அவ்வூராட்சிகளின் கூட்டமைப்புகளின் அடிப்படை விவரங்களை சேகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்த பயிற்சி, சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகக் கலையரங்கில் 20.11.2019 மற்றும் 21.11.2019 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது. இப்பயிற்சியினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றினார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு) திருமதி. சரஸ்வதி கணேசன் அவர்கள், இணை இயக்குநர் திருமதி. செல்வராணி அவர்கள் முன்னிலையில், திருமதி. மெய்யம்மை (மேலாளர் SM/IB), திருமதி. காளத்தி, (திட்ட ஒருங்கிணைப்பாளர், TNVRC) திருமதி. நாகதேவி (இளம் வல்லுநர்) மற்றும் திரு. சுதா (திட்ட செயலர் -MIS) ஆகியோர் பயிற்சிகளை வழங்கினர்.

கடலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களின் மகளிர் திட்டத்தைச் சேர்ந்த SM/IB, IB&CB, MIS, A&A ஆகிய பிரிவுகளின் உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார மேலாளர் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்களுக்கு 20.11.2019 அன்றும், ஈரோடு, சேலம் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களின் மகளிர் திட்டத்தைச் சேர்ந்த SM/IB, IB&CB, MIS, A&A ஆகிய பிரிவுகளின் உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார மேலாளர் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்களுக்கு 21.11.2019 அன்றும் பயிற்சி வழங்கப்பட்டது.

இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பினை பெருக்கிட ஒப்பந்தம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் மூலம் கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய பல்வேறு தொழில் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் திறன் பயிற்சிகள் பெற்ற இளைஞர்கள் பல்வேறு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர். வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இளைஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினை பெருக்கிடும் வகையில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மஃபா மனிதவள நிறுவனம் ஆகியவற்றிற்கிடையே 28.11.2019 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள், மஃபா மனிதவள நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி. லதா பாண்டியராஜன் அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் / DDU-GKY-ன் முதன்மை இயக்கு அலுவலர் திரு. ஜே. கணேஷ் கண்ணா அவர்கள், இணை இயக்குநர் / மாநில திட்ட அலுவலர் திருமதி. என். கவிதப்பிரியா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தினை செயல்படுத்தும் நிறுவனங்களுக்கான ஆய்வுக் கூட்டம்

கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய பல்வேறு தொழில் திறன் பயிற்சிகளை வழங்கி வரும் தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டம் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தேர்வு செய்யப்பட்ட நிறுவனங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம் 20.11.2019 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் / DDU-GKY-ன் முதன்மை இயக்கு அலுவலர் திரு. ஜே. கணேஷ் கண்ணா அவர்கள், இணை இயக்குநர் / மாநில திட்ட அலுவலர் திருமதி. என் கவிதப்பிரியா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை கர்நாடக மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுவினர் பார்வையிடல்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சிறப்பான செயல்பாடுகளைப் பார்வையிடுவதற்காக, கர்நாடக நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர். அருந்ததி சந்திரசேகர், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் 8 பேர் கொண்ட குழுவினர் இரண்டு நாள் களப்பயணமாக சென்னை வந்தனர்.

களப் பயணத்தின் முதல் நாளன்று, சென்னையில் செயல்படும் நகர்ப்புற வீடற்றவர்களுக்கான ஆண்கள் தங்குமிடம், பெண்கள் தங்குமிடம், திருநங்கையர் தங்குமிடம் மற்றும் மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொள்ளும் நோயாளிகளின் உறவினர்கள் தங்குமிடம் போன்றவற்றினையும், இரண்டாம் நாள் களப்பயணத்தில் தண்டையார்பேட்டையில் செயல்படும் பகுதி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகளையும் பார்வையிட்டனர்.

களப்பயணத்தினைத் தொடர்ந்து, கர்நாடக மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்களின் தலைமையிலான குழுவினர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மாநில அலுவலகமான சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்களையும், செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்களையும் சந்தித்து, களப்பயணத்தில் கண்டறிந்த செயல்பாடுகளை விவரித்தும், தமிழ்நாட்டில் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சிறப்பாக செயல்படுத்தப்படுவதாகவும் கூறி, தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர். பின்னர் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் திட்ட செயல்பாடுகள், சிறப்பு முயற்சிகள் ஆகியன கர்நாடக மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுவினருக்கு எடுத்துரைக்கப்பட்டது. தமிழகத்தில் செயல்படுத்தப்படும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சிறப்பான புதுமைத் திட்டங்களை கர்நாடகா மாநிலத்திலும் மேற்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் விரைவுபடுத்தப்படும் எனவும், தங்களின் பயணம் மிகுந்த பயனுள்ளதாக அமைந்ததாகவும் கர்நாடக மாநில குழுவினர் தெரிவித்தனர்.

புதியதாக தேர்வு செய்யப்பட்ட உதவி திட்ட அலுவலர்களுக்கான பயிற்சி

புதிதாக தேர்வு செய்யப்பட்ட உதவி திட்ட அலுவலர்களுக்கு மகளிர் வாழ்வாதார திட்ட செயல்பாடுகளான நிறுவன மற்றும் திறன் மேம்பாடு, நிதி சேர்ப்பு, வாழ்வாதார ஊக்குவிப்பு, சமூக உட்சேர்க்கை, தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா மற்றும் மேலாண்மை தகவல் அமைப்பு ஆகியவற்றிற்காக மாவட்டங்களில் பணிபுரிய தேவையான தூண்டுதல் மற்றும் அதற்கான கருப்பொருள் விவரித்தல் குறித்த பயிற்சிகள், காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகரில் உள்ள ஊரக வளர்ச்சித் துறை பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள் திரு. பா. செல்வராஜன், திரு. ஜா. சம்பத், திருமதி. சரஸ்வதி கணேசன், திரு. சி. கே. வீரணன், இணை இயக்குநர் திருமதி. செல்வராணி, நிதி ஆலோசகர் செல்வி நிரூபா ராணி, மாநில திட்ட மேலாளர் திரு. சரவணன், உதவி இயக்குநர் திருமதி. ஏ. கோப்பெருந்தேவி, பொது மேலாளர் திருமதி. ச. சந்தோஷினி சந்திரா, முதுநிலை கணினி மேலாளர் திரு. ஜி. காந்தி காளிதாஸ், திருவள்ளூர் மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திரு. ஜெயக்குமார், டி.என்.வி.ஆர்.சி.யின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. தீபா ராஜ்கமல், முதுநிலை ஆலோசகர் (நிதி உள்ளாக்கம்) திரு. கே. எம். திருநாவுக்கரசு, ஒருங்கிணைப்பாளர் திருமதி. காளத்தி மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் பயிற்சிகளை வழங்கினர்.

வாக்களிப்போம்...! வளம் பெறுவோம்...!

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாக இந்தியா விளங்குவது நம் அனைவருக்கும் பெருமையான செய்தியாகும். அந்த ஜனநாயகத்தைக் காப்பதில் நாம் அனைவரும் உறுதியுடன் இருக்க வேண்டும்.

நம் நாட்டில் இந்திய பாராளு மன்றம், மாநில சட்டமன்றம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள் தேர்தலின் வழியாக தேர்வு செய்யப்படுகின்றனர். தேர்தலில் வாக்களிப்பதற்கு முதலில் உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இடம் பெறவில்லை எனில் உடனே பெயரை பதிவதற்கான முயற்சி மேற் கொள்ளுங்கள்.

18 வயது நிரம்பியவர்கள் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றவர்கள் ஆவர். இந்த வயதினர் வாக்காளர் பட்டியலில் தங்களின் பெயரைச் சேர்க்கலாம். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்காக நடைபெறும் சிறப்பு முகாம்களில் கலந்து கொண்டு உங்கள் பெயரை எளிதாக வாக்காளர் பட்டியலில் சேர்க்க முடியும்.

ஆகவே, வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டுள்ளவர்கள், 18 வயது நிறைவு பெற்றவர்கள் போன்ற வர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க நடத்தப்படும் முகாம்களில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்களின் முழுமையான பங்களிப்பை செலுத்தி வாக்காளர்களாக மாறுங்கள். மேலும் 100 சதவிகித வாக்குப்பதிவு என்ற இலக்கை அடையவும், நாட்டில் நல்லாட்சி அமையவும், ஜனநாயகத்தினை நிலை நிறுத்தவும் உங்களின் ஒவ்வொரு வாக்கும் முக்கியம் என்பதை நினைவில் கொண்டு தவறாது வாக்களியுங்கள். சாதி, மதம், இனம் வேறுபாடின்றி நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டே வாக்களியுங்கள்.

100 சதவீத வாக்கு என்பது ஜனநாயகத்திற்குப் பெருமை சேர்ப்பதாகும். எனவே மறவாமல் வாக்களியுங்கள். வாக்காளர் என்பதில் பெருமை அடையுங்கள்.

பெருநகரங்கள் முதல் கடைக்கோடி கிராமங்கள் வரை அடிப்படைத் தேவைகளில் தன்னிறைவு அடைய செயல்படும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளைத் தேர்வு செய்ய நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் இந்த வாக்குரிமையைப் பயன்படுத்த மறக்காதீர்கள். உங்கள் விரலில் வைக்கப்படும் அடையாள மை நாட்டின் ஜனநாயகத்திற்கு நீங்கள் ஆற்றிய கடமையை வெளிக்கொணரும் அடையாளம் என்பதை நினைவில் கொண்டு வாக்களியுங்கள்.

அனைவரும் தவறாது வாக்களித்து ஜனநாயகத்திற்கு துணை நிற்போம் என்று கூறி, தவறாது வாக்களிக்க உறுதி ஏற்றிடுவோம்.

சமையல்
குறிப்புகள்

கொள்ளு தரும் மருத்துவப் பலன்கள்!

கொள்ளு ஓர் ஆரோக்கிய உணவு. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்றது. ஊற வைத்தோ, வறுத்தோ சாப்பிடலாம். ரசம், துவையல், குழம்பு என விதவிதமாகச் சமைத்தும் சாப்பிடலாம். இதை ஊறவைத்த நீரில்கூட எண்ணற்ற மருத்துவப் பலன்கள் இருக்கின்றன. 'கொழுத்தவனுக்கு கொள்ளு; இளைத்தவனுக்கு எள்ளு' பலமுறை கேட்ட முதுமொழி. ஆனால், அர்த்தம் நிறைந்தது. கொழுப்பைக் கரைப்பதில் கொள்ளுக்கு அத்தனை சக்தி உண்டு.

கொள்ளுவின் மருத்துவப் பலன்கள்

புரதம் நிறைந்தது: அதிக புரதச்சத்து நிறைந்த சிறுதானிய வகையைச் சேர்ந்தது. நம் உடல் வளர்ச்சிக்கும், திசுக்கள் முறையாக வேலைசெய்யவும், பழுதடைந்த திசுக்களைச் சரி செய்யவும் இதிலுள்ள புரதம் உதவுகிறது.

உடல் எடை குறைக்கும்: சாப்பாட்டில் அடிக்கடி இதைச் சேர்த்துக் கொண்டால், உடல் எடையைக் குறைக்க உதவும். முதல் நாள் இரவில் ஒரு கைப்பிடி கொள்ளுவை எடுத்து தண்ணீரில் ஊறவைத்து, காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகள் குறையும்.

சளி, காய்ச்சல்: இதை தண்ணீர் சேர்த்துக் கொதிக்க வைத்து அந்த நீரை அருந்தினால், ஜலதோஷம் குணமாகும். ரசமாக வைத்து சாப்பிட்டால், உடல்வலி, ஆஸ்துமா போன்ற சுவாச பிரச்னைகள் சரியாகும்; சுவாசத் தொந்தரவு நீங்கும்; காய்ச்சலையும் குணமாக்கும்.

நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்: உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கத் தேவையான ஊட்டச் சத்துகளும் இதில் நிறைந்துள்ளன. இது, உடல் உறுப்புகளை பலம் பெற வைக்கும். நோய் பாதிப்பிலிருந்து காப்பாற்றும். எலும்புக்கும் நரம்புக்கும் வலுசேர்க்கும். இதை அரிசியுடன் சேர்த்துக் காய்ச்சி, கஞ்சியாக உட் கொள்ளலாம். இதனால், பசியின்மை நீங்கும்; உடல் வலுவாகும்.

சிறுநீரகக் கற்களைக் கரைக்கும்: இதை சமையலில் சேர்த்து சாப்பிட்டு வந்தால், சிறிய அளவிலான சிறுநீரகக் கற்களை கரைத்து வெளியேற்றும். மேலும், கொள்ளுவையும் இந்துப்பையும் சிறிது எடுத்துக் கொண்டு, அவற்றுடன் ஒரு லிட்டர் தண்ணீர் சேர்த்துக் கொதிக்க வைத்து சாப்பிட்டு வந்தால், சிறுநீரகங்கள், சிறுநீரகப் பாதை போன்ற உள்ளுறுப்பு களில் சேரும் கற்களைக் கரைக்கும்.

சர்க்கரைநோய் தடுக்கும்: நாம் உண்ணும் உணவில் உள்ள சர்க்கரையின் அளவைக் கணக்கிடும் அளவுகோல் `கிளைசெமிக் இண்டெக்ஸ்' எனப்படும். இந்த அளவீடு அதிகமாகும்போது, ரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அளவு அதிகரிக்கும். ஆனால், கொள்ளு ஆன்டி ஹைப்பர் -கிளைசெமிக் உணவு வகையை சேர்ந்தது. எனவே, இது சர்க்கரை நோய்க்கு சிறந்த மருந்தாகும்.

சுவையான புளியோதரை

உணவு என்பது சுவையாகவும், உடல் நலத்திற்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். வீட்டிலேயே சுவையான புளியோதரையை செய்யும் முறை குறித்து இங்கு காணலாம்.

புளியோதரை செய்ய தேவையான பொருட்கள்:

ஐந்து நபர்களுக்குத் தேவையான அளவு சாதம், புளி சிறிய உருண்டை, மல்லி, கடலை பருப்பு, எள்ளு, மிளகு ஆகியவை தலா 1 ஸ்பூன், வெந்தயம், உளுந்து, மஞ்சள் தூள் தலா 1/2 ஸ்பூன், காய்ந்த மிளகாய் 3, எண்ணெய், கடுகு, கருவேப்பிலை, உப்பு ஆகியவை சிறிதளவு

செய்முறை:

முதலில் ஒரு உருண்டை புளியை எடுத்து அதனை தண்ணீரில் ஊற வைக்கவும். பிறகு ஒரு கடாயில் கடலை பருப்பு, மல்லி, எள்ளு, வெந்தயம், மிளகு மற்றும் காய்ந்த மிளகாய் போட்டு வறுத்து எடுத்து, அதனை மிக்சியில் போட்டு அரைத்து வைத்து கொள்ளவும். பிறகு கடாயில் சிறிதளவு எண்ணெய் ஊற்றி அடுப்பில் வைத்து கடுகு, கடலைப் பருப்பு மற்றும் உளுந்து ஆகியவற்றைப் போட்டு வறுத்த மணிலாவை அதில் சேர்க்கவும். பிறகு அதனுடன் கருவேப்பிலை, காய்ந்த மிளகாய், அரைத்து வைத்துள்ள பொடி (பாதி அளவு) ஆகியவற்றைப் போட்டு வதக்கவும்.

பிறகு ஊற வைத்த புளிக்கரைசலை இதனுடன் சேர்த்து அதனுடன் சிறிதளவு உப்பு சேர்த்து நன்றாக கொதிக்க விடவும். நன்றாக கொதிக்கும் போது அதில் ஆற வைத்த சாதத்தினை சேர்த்து கிளற வேண்டும். கிளறிய பிறகு அரைத்து வைத்துள்ள மீதி பொடியை தூவி மீண்டும் நன்றாக கிளறி எடுத்தால் சுவையான புளியோதரை தயார்.

இந்தப் புளியோதரையை 20 நிமிடத்தில் சமைத்து விடலாம். பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவரும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. அவைகளின் தொழில் நடவடிக்கைக்குத் தேவையான நிதி தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் வங்கிக் கடன்களாக வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் கிடைக்கும் கடன் தொகையினைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் மேலும் உற்சாகமாக தங்களின் தொழில் நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டு பொருளாதார வளர்ச்சி பெற்று வருகின்றன.

■ சிவகங்கை மாவட்டம்

சிவகங்கை மாவட்ட மகளிர் திட்டத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்கும் முகாம் 22.10.2019 அன்று சிவகங்கை ராயல் மஹாலில் நடைபெற்றது. சிவகங்கை மாவட்டத்தின் முன்னோடி வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கியால் ஒருங்கிணைங்கப்பட்ட இக்கடன்வழங்கும் முகாமில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திரு. ஜெ. ஜெயகாந்தன், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, 108 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நேரடிக் கடனாக ரூ. 5.02 கோடி வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திரு. க. அருண்மணி, சிவகங்கை மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் மற்றும் வங்கிகளின் பிரதிநிதிகள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

■ திருப்பூர் மாவட்டம்

திருப்பூர் மாவட்டத்தில் 22.11.2019 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் குழு கூட்டத்தில் குண்டடம் வட்டாரம், ஆறுத்தொழுவு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு கனரா வங்கி, ஊதியூர் கிளை மூலம் பெருங்கடனாக ரூ. 13.10 இலட்சம் மற்றும் அவினாசி வட்டாரம், கானூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு கனரா வங்கி கருவலூர் கிளை மூலம் பெருங்கடனாக ரூ. 27.00 இலட்சம் என மொத்தம் ரூ. 40.10 இலட்சம் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் திருப்பூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், வங்கி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

■ காஞ்சிபுரம் மாவட்டம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் குன்றத்தூர் மற்றும் புனித தோமையார் மலை ஒன்றியங்களைச் சார்ந்த சுய உதவிக் குழுக்களுக்கு தமிழ்நாடு கிராம வங்கியின் மூலம் வங்கிக் கடன் இணைப்பு வழங்கும் விழா 21.11.2019 அன்று பம்மலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் நிதி ஆலோசகர் செல்வி. அ. நிருபாராணி அவர்கள், தமிழ்நாடு கிராம வங்கியின் மண்டல மேலாளர் திரு. என். டேவிட் விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டு, பொழிச்சலூர் மற்றும் நந்தம்பாக்கம் பகுதியில் செயல்படும் 28 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 68,50,000/ வங்கிக் கடன் இணைப்பு வழங்கினர். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு கிராம வங்கியின் பொழிச்சலூர் மற்றும் நந்தம்பாக்கம் கிளை மேலாளர்கள், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வட்டார மேலாளர் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணை வழங்குதல்

தமிழகத்தில் கிராம மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் சார்பில் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு அதன் மூலம் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படுகிறது. மேலும் தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா திட்டத்தின் கீழ் பல்வேறு தொழிற் பயிற்சிகளும் வழங்கப்படுகிறது.

▪ *நீலகிரி மாவட்டம்*

நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில், வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு முகாம் 09.11.2019 அன்று உதகமண்டலத்தில் உள்ள பழங்குடியினர் கலாச்சார மையத்தில் நடைபெற்றது. இதில் 847 இளைஞர்கள் கலந்துக் கொண்டனர். 31 தனியார் நிறுவனங்கள் நேர்காணல் நடத்தி 376 நபர்களை தங்களின் நிறுவனத்தில் பணியாற்றத் தேர்வு செய்தன. பணிக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

▪ *திருப்பூர் மாவட்டம்*

திருப்பூர் மாவட்டத்தில், தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் (DDU-GKY) கீழ் 16.11.2019, 23.11.2019 மற்றும் 30.11.2019 ஆகிய தேதிகளில் முறையே மடத்துக்குளம், வெள்ளக்கோவில் மற்றும் தாராபுரம் ஆகிய வட்டாரங்களில் வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. 72 தனியார் தொழில் நிறுவனங்கள் கலந்து கொண்ட இந்த மூன்று வேலைவாய்ப்பு முகாம்களிலும் 2,332 இளைஞர்கள் கலந்து கொண்டு பணிவாய்ப்பு வேண்டி விண்ணப் பித்தனர். அவர்களில் 353 இளைஞர்கள் மனிதவள மேலாளர், நிர்வாக அலுவலர், தையலர், அணித் தலைவர், தர மதிப்பீட்டு அலுவலர், CNC Operator, Relationship officer, System Operator *ஆகிய பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டனர். மேலும் 233 இளைஞர்கள்* Retail Services, Tailoring, BPO Voice and Non Voice, Nursing, Account Assistant, Inventory Clerk *மற்றும்* Fork lift Operator *ஆகிய பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.*

■ *சிவகங்கை மாவட்டம்*

வங்கியாளர்களுக்கான ஒரு நாள் புரிந்துணர்வு பயிற்சி

சிவகங்கை மாவட்ட தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து ஒருநாள் புரிந்துணர்வு பயிற்சி இரண்டு கட்டமாக 24.10.2019 அன்று நடைபெற்றது. இந்நிகழ்விற்கு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திரு. ஜெ. ஜெயகாந்தன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று சிறப்புரையாற்றினார்.

சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திரு. க. அருண்மணி அவர்கள், வங்கியாளர்களுக்கு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து விளக்கம் அளித்தார். வங்கியாளர்களுக்கான இப்பயிற்சியில் மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர்கள் என மொத்தம் 120 வங்கியாளர்கள் கலந்து கொண்டனர்.

■ *திருச்சிராப்பள்ளி மாவட்டம்*

ஊட்டச் சத்துத் தோட்டம் அமைக்க காய்கனி விதைகள் வழங்கும் நிகழ்ச்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இலால்குடி, புள்ளம்பாடி, திருவெறும்பூர், வையம்பட்டி மற்றும் உப்பிலியபுரத்திலுள்ள 134 ஊராட்சிகளில் ஊட்டச்சத்து காய்கறி தோட்ட திட்டம் துவக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக இலால்குடி வட்டாரத்திலுள்ள தாளக்குடி ஊராட்சியினைச் சேர்ந்த கீரமங்கலத்தில் இத்திட்டம் தொடர்பாக பயனாளிகளுக்கு காய்கறி விதைகள் வழங்கப்பட்டது. இதில் இவ்வூராட்சியைச் சேர்ந்த மகளிர் குழு உறுப்பினர்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. என். சரவணன் அவர்கள் காய்கறி மற்றும் கீரை விதைகளை வழங்கினார். மேலும் ஜாதிப்பூ மகளிர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த திருமதி. சத்யவாணி என்பவருடைய வீட்டுத் தோட்டத்தில் காய்கறி மற்றும் கீரை விதைகள் நடும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சத்துணவு தோட்டத்தின் அவசியம் பற்றியும், விதைகளை நடும் பருவம் மற்றும் காய்கறிகள் மற்றும் கீரை வகைகள் அறுவடை செய்யப்படுவதற்கு ஆகும் காலம் குறித்த விபரங்களையும் பங்கேற்பாளர்களிடம் திட்ட இயக்குனர் அவர்கள் எடுத்துக் கூறினார். இந்நிகழ்ச்சியில் உதவித் திட்ட அலுவலர்கள் திரு. ஆ. ஜான்பால் அந்தோணி மற்றும் திரு. ஏ. ஜூலியஸ் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள மாடித் தோட்டத்தை அமெரிக்கா மற்றும் ஜெர்மன் நாட்டின் பிரதிநிதிகள் பார்வையிடல்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் மற்றும் கூடுதல் இயக்குநர் (வாழ்வாதாரம்) அவர்களின் மேலான வழிகாட்டுதலின்படி சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் மாடியில் இயற்கை முறையிலான மாடித்தோட்டம் அமைக்கத் திட்டமிடப்பட்டது. அதனடிப்படையில் தமிழகம் முழுவதிலும் ஒவ்வொரு மாவட்டத் திலிருந்தும் 5 நபர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு மாடித் தோட்டம் அமைப்பது குறித்த பயிற்சி வழங்கி, அவர்களைக் கொண்டு, 1000 மூங்கில் கூடைகளில் முற்றிலும் இயற்கை முறையிலான மாடித்தோட்டம் அமைக்கப்பட்டு, அந்தத் தோட்டமானது மகளிர் சுய உதவிக் குழுவினரைக் கொண்டே பராமரிக்கப்பட்டு வருகிறது.

இம்மாடித் தோட்டத்தினை மாதிரித் தோட்டமாகக் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் வாய்ப்புள்ள இடங்களில் மாடித்தோட்டம் அமைத்திடத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து விருதுநகர், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மாடித் தோட்டம் அமைக்கப்பட்டு அவைகள் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்களின் ஆலோசனையின்படி நமது மாடித்தோட்டம் போன்று சென்னை மாநகராட்சி பள்ளிகளில் மாடித்தோட்டம் அமைத்திடவும், அப்பணியினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், சென்னை பெருநகர மாநகராட்சி மற்றும் Rockefeller Foundation உடன் இணைந்து செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து Rockefeller Foundation நிறுவனத்தின் அமெரிக்கா மற்றும் ஜெர்மன் நாட்டின் பிரதிநிதிகள் சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள மாடித்தோட்டத்தினை பார்வையிட்டு, சென்னை மாநகராட்சி பள்ளிகளில் மாடித்தோட்டம் அமைப்பதற்கான வழிமுறைகள் குறித்து தெரிந்து கொண்டனர்.

தெலுங்கானா மாநிலம், ஹைதராபாத் 'RTP MELA' கண்காட்சியில் தமிழக மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனை அரங்கு

தெலுங்கானா மாநிலம், ஹைதராபாத்தில் தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனத்தின்(NIRD) சார்பில் 29.11.2019 முதல் 03.12.2019 வரை நடைபெற்ற 'RTP MELA' கண்காட்சியில் தமிழகத்தின் பாரம்பரிய மற்றும் கைவினைப் பொருட்கள், செயற்கை ஆபரணங்கள், சணல் பைகள் (Jute Bag) தயாரிக்கும் மகளிர் சுய உதவிக் குழுவினர் கலந்து கொண்டு தங்களின் தயாரிப்புப் பொருட்களை 10 அரங்குகளில் வைத்து விற்பனை செய்தனர். இக்கண்காட்சியினை துவக்கி வைத்த தெலுங்கானா மாநில ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தர்ரராஜன் அவர்கள், கண் காட்சியில் அரங்குகள் அமைத்திருந்த தமிழக மகளிர் சுய உதவிக் குழுவினரின் தயாரிப்புப் பொருட்களைப் பார்வையிட்டு, தமிழக சுய உதவிக் குழு மகளிரின் தயாரிப்புப் பொருட்கள் சிறப்பாக உள்ளது என கூறியதுடன், மகளிர் சுய உதவிக் குழுக்களின் முயற்சிக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தார். இக்கண்காட்சியில் தமிழக சுய உதவிக் குழுவினரின் தயாரிப்புப் பொருட்கள் சுமார் ரூ. 15,00,000/-க்கு விற்பனை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வாழ்வாதார இயக்கங்கள்... வளர்ச்சிக்கு நல்ல விளக்கங்கள்...!

வாழ்வாதார இயக்கங்கள் வளர்ச்சிக்கு நல்ல விளக்கங்கள்;
வறுமையையொழித்து வளத்தினைப் பெருக்க அவையே சிறந்த திட்டங்கள்!
மகளிர் குழுக்கள் பல அமைத்து, பயிற்சிகள் உதவிகள் பல புரிந்து
வங்கிகள் மூலம் கடன் வழங்கி வாழ்வை உயர்த்தும் இயக்கங்கள்!

மழை நீர் சேமிப்பு பூமிக்கு வளம்; மகளிரின் சேமிப்பு வாழ்வுக்கு வளம்;
சிக்கனமே என்றும் வளர்ச்சியின் பலம்; வறுமையை ஒழிக்க இதுவே களம்!
அதிக வட்டிக்குப் பெருங்கடனும், அவசியமற்ற வீண் செலவுகளும்
வரவுக்கு மிஞ்சிய ஆசைகளும் வறுமையை வளர்க்கும் தீமைகளாம்!

உழைப்பு என்பது வெற்றியின் விலை; சேமிப்பு என்பது மகிழ்ச்சியின் விதை;
உழைப்பும் திறமையும் ஒன்றாய் இணைந்தால் உயரும் ஏழைகள் வாழ்வு நிலை!
தென்றலில் கலந்த நறுமணம்போல ஒன்றுபட்டால் ஒரு மகிழ்ச்சி வரும்;
ஒற்றுமையுடனே உழைப்பவர் வாழ்வில் வாழ்வாதார வளர்ச்சி வரும்!

தேவைகள் உள்ள தொழில்களை அறிந்து தொடங்கிடும் முயற்சிகள் வேண்டும்;
லாபம் கிடைக்கும் வகையில் அவைகளை மாற்றிட உழைத்திட வேண்டும்;
அரசின் உதவிகள், வங்கி உதவிகள் எல்லாம் அறிந்திட வேண்டும்;
நம்பிக்கையுடனே தொடர்ந்து உழைத்து வெற்றியை அடைந்திட வேண்டும்!

வாங்கிய கடனைப் படிப்படியாகத் திருப்பிச் செலுத்திட வேண்டும்;
நேர்மை, நாணயம் நெஞ்சினில் கொண்டு குழுக்களின் பேர்காக்க வேண்டும்!
ஊரக, நகர்ப்புற இயக்கங்கள் இவையனைத்தையும் நன்றாய் சொல்லித் தரும்-இதில்
சேரும் ஏழை மகளிர்க்கெல்லாம் வாழ்வாதாரங்கள் பெருகி வரும்!

● ஜா. சம்பத்,
கூடுதல் முதன்மை
செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரகப்
புத்தாக்கத் திட்டம்



உயிர்களைக் காக்கும் உடல் உறுப்பு தானம்

தன் உடலிலுள்ள உறுப்பையோ, அல்லது உறுப்புக்களின் ஒரு பகுதியையோ, மரண வாசலில் நின்று கொண்டு பரிதவிக்கும் ஒருவருக்கு, தாமாக முன்வந்து தந்து அவர்களை மரணத்திலிருந்து காப்பாற்றுவது ``உடல் உறுப்பு தானம்' எனப்படும்.

பொதுவாக நமக்குத் தெரிந்து ரத்ததானம், கண் தானம் இந்த இரண்டு வித தானங்கள் தான் அதிக அளவில் இருந்து வருகின்றன. உடல் உறுப்பு தானம் குறித்தும், நம் உடலில் உள்ள என்னென்ன உறுப்புகள் தானமாகக் கொடுக்கப்படுகின்றன என்பதை பற்றியும் தெரிந்து கொள்வோம் வாருங்கள்.

உடல் உறுப்புகளின் தானம் இரண்டு வகைப்படும். முதலாவது, ஒருவர் உயிருடன் இருக்கும் போது தருவது. இரண்டாவது, ஒருவர் இறந்த பின்னர் தருவது.

ஒரு சிறுநீரகம், ஈரலின் ஒரு பகுதி, நுரையீரலின் ஒரு பகுதி, குடலின் ஒரு பகுதி, கணையத்தின் ஒரு பகுதி, ரத்தம் ஆகியவை உயிருடன் இருக்கும் போது தானமாக தரக்கூடிய உடல் உறுப்புக்கள் ஆகும்.

இரண்டு சிறுநீரகங்கள், கணையம், கல்லீரல், நுரையீரல், குடல் முழுவதும், கண் விழித்திரை (கார்னியா) போன்றவை இறந்த பின்னர் தானமாக தரக்கூடிய உறுப்புக்கள் ஆகும்.

உயிருடன் இருக்கும் பொழுது தானம் செய்ய விதிமுறைகள் உள்ளனவா?

ஆரோக்கியமான அனைவரும் உடல் உறுப்பு தானம் செய்யலாம். என்றாலும் அதற்கென்று சில விதிமுறைகள் உள்ளன. 1954ம் ஆண்டு முதல் கடை பிடிக்கப்படும் விதிகள் பின்வருமாறு :

நோயாளியின் ரத்த சம்பந்தங்கள், சகோதரன், சகோதரி, பெற்றோர், 18 வயதிற்கு மேற்பட்ட மகன், மகள், மாமா, அத்தை, சித்தப்பா, அவர்களுடைய மகன், மகள் போன்ற நெருங்கிய சொந்தங்கள் உடல் உறுப்பு தானம் செய்யலாம்.

ரத்த சம்பந்தம் இல்லாத ஆனால் நெருங்கிய நண்பர்கள், மனைவி, மாமனார், மாமியார், கூட வேலை செய்பவர்கள், பக்கத்து வீட்டிலுள்ளவர்கள் போன்ற நெருக்கமானவர்களும் தரலாம்.

சிறுநீரகத்திற்காக இரண்டு நோயாளிகள் காத்திருக்கின்றனர் என்று வைத்துக் கொள்வோம், அவர்களுக்கு தானம் தர முன் வருபவர்களின் உடல் உறுப்பு ஒருவருக்கு



யார் யார் உடல் உறுப்புக்களை தானமாக தரமுடியும்?

நல்ல ஆரோக்கியமாக இருப்பவர்கள், ரத்தக்கொதிப்பு, சர்க்கரை நோய், புற்று நோய், இதய நோய், பால்வினை நோய், ஹெபடைடீஸ் நோய் போன்ற வியாதிகள் எதுவும் இல்லாதவர்கள் அனைவரும் உயிருடன் இருக்கும் போது தானம் செய்யத் தகுதியானவர்கள்.

பொருந்தாமல், மற்றொரு நோயாளிக்கு பொருந்துமேயானால் அவர்கள் ஒருவருக்கு ஒருவர் சிறுநீரகங்களை பரிமாறிக் கொள்ளலாம்.

உயிருடன் இருக்கும் போது, உடல் உறுப்பு தானம் செய்வதால், தானம் செய்பவருக்கு ஏதாவது ஆபத்து இருக்கிறதா?

பொதுவாக, தானம் செய்கின்றவர்களுக்கு எந்த பாதிப்பும் வருவதில்லை. இரண்டு சிறுநீரகங்கள் உள்ளவர்கள், ஒன்றை தானமாகத் தரும் போது, இரண்டு உறுப்புகள் செய்ய வேண்டிய வேலையை ஒரு உறுப்பு செய்வதால், அதனுடைய அளவு சிறிது பெரியதாக ஆகும், ஆனால் நாளடைவில் தானாகவே சரியாகிவிடும். தானம் செய்தவர், தன் வேலையை, தானாகவே செய்து கொள்ளலாம், பாதிப்பு இருக்காது. கல்லீரலின் ஒரு பகுதியை தானம் செய்த பின், தானாகவே மறுபடியும் வளர்ந்து விடும். நுரையீரலின் ஒரு பகுதியை மட்டுமே எடுப்பதால், மீதமுள்ள பகுதிகள் சீராக வேலை செய்ய தடை இல்லை. ரத்ததானம் செய்பவர்களிடமிருந்து 100 மில்லியிலிருந்து 300 மில்லி லிட்டர் அளவுதான் ஒரு சமயத்தில் எடுப்பார்கள். அதுவும் இரண்டே நாட்களில் மறுபடியும் உடலில் சுரந்து சரியாகி விடும். ஆனால் ரத்ததானம் செய்ய முன் வருபவர்கள், மஞ்சள் காமாலை நோயினால் தாக்கப்பட்டிருக்கக் கூடாது, ஆண்டிபயாடிக்ஸ் மருந்துகளை சமீபகாலத்தில் சாப்பிட்டிருக்கக் கூடாது, எந்த போதை வஸ்துக்களையும் உபயோகப்படுத்தி இருக்கக் கூடாது, மது அருந்தி இருக்கக்கூடாது, ஸ்டீராய்டு மருந்து சாப்பிட்டிருக்கக் கூடாது, உடல் ரத்த அழுத்தம் உயர் ரத்த அழுத்தமாகவோ அல்லது குறைந்த ரத்த அழுத்தமாகவோ இருக்கக் கூடாது. ரத்த சோகை இருக்கக் கூடாது, குறைந்தது மூன்று மாதங்களுக்குள் ரத்த தானம் செய்திருக்கக் கூடாது. மற்ற அனைவரும் ரத்த தானம் செய்ய முன் வர வேண்டும்.

உடல் உறுப்பு தானம் செய்ய வயது வரம்பு உண்டா?

18 வயது முதல் 60 வயது வரையில் உள்ளவர்கள், அது ஆணாக இருந்தாலும் சரி அல்லது பெண்ணாக இருந்தாலும் சரி தாமாக முன் வந்து தானம் செய்யலாம்.

வேறு என்னென்ன உறுப்புகளை தானமாக தர முடியும்?

கண்ணின் விழித்திரை (கார்னியா) எலும்பு, எலும்பின் மஜ்ஜை (போன் மாரோ), ரத்த நாளங்கள், தோல், இதயம், இதயத்திலுள்ள வால்வுகள், கணையம், கல்லீரல், நுரையீரல் போன்ற அனைத்தையும் தானமாக தரலாம். ஒருவரிடமிருந்து இருபத்தி ஐந்து வகையான உறுப்புக்களையும், திசுக்களையும், தானமாக பெற முடியும். ஒரு மனிதன், பத்து பேர்களுக்கு தன் உறுப்புக்களை தானமாக தர முடியும். ஒருவரின் இதயத் துடிப்பு நின்று விட்டாலோ அல்லது நுரையீரல் வேலை செய்யாமல் இருந்தாலோ (கார்டியோ பல்மோனரி பெயிலியர்) அல்லது மூளை செயல் இழந்து போய், இருதயம் மட்டும் துடித்துக் கொண்டிருந்தாலோ (பிரையின் டெத்), அவர்களுடைய நெருங்கிய உறவினரின் சம்மதம் பெற்று, அவர் உடலிலிருந்து இருபத்தி ஐந்து வகையான உறுப்புக்களையும், திசுக்களையும், எடுத்து தேவையானவர்களுக்கு பொருத்தலாம். எலும்புகளையும், திசுக்களையும், எந்தவித மரணமாக இருந்தாலும், எடுத்து மற்றவர்களுக்கு பொருத்தலாம். ஆனால் உடல் உறுப்புக்களான, இதயம், கல்லீரல், நுரையீரல் போன்றவை, மூளைச்சாவு அதாவது மூளை செயல் இழந்து, உயிர் மட்டும் ஊசலாடிக் கொண்டிருக்கும் நோயாளிகளிடமிருந்து எடுத்தால் மட்டும் பயன்படும்.

ஒருவரின் மூச்சு-சுவாசம் நின்ற பின்னர் என்ன மாறுதல் மூளையில் ஏற்படுகிறது?

ஒருவரின் சுவாசம் நின்றவுடன் ஐந்து அல்லது பத்து நிமிடங்களில் மூளையின் செல்கள் செயல் இழந்து போகின்றன. மூன்றாவது நிமிடத்தில் மூளை வெகுவாக பாதிக்கப்படுகிறது. பத்தாவது நிமிடத்தில் இன்னும் அதிகமான மூளை செல்கள் பாதிக்கப்படும் என்பதால் நோயாளியை பிழைக்க வைக்க முடியாது. சுவாசம் நின்ற 15 நிமிடத்திற்கு பிறகு ஒருவரை பிழைக்க வைக்க முடியாது.

உடல் உறுப்புக்களை எவ்வாறு பிரித்து எடுக்கிறார்கள்?

உடம்பிலிருந்து ஒரு உறுப்பை எடுப்பதற்கு முன்னர், நன்றாக குளிர்ந்த, பதப்படுத்துவதற்கு உபயோகப்படும் ரசாயன கலவையை அந்த உறுப்புகளுக்கு செலுத்தி, அந்த குளிர்ந்த திரவத்தில் அந்த உறுப்பு உலர்ந்து போகாமல் இருக்கும்படி செய்கிறார்கள். கலப்படமில்லாத, சுத்தமான ஐஸ் கட்டிக்களைக்கூட பயன்படுத்தலாம். எடுக்கப்பட்ட உறுப்பு நன்றாக சுத்தம் செய்யப்பட்ட (ஸ்டெரிலைஸ்) ஜாடி, குடுவை அல்லது பாத்திரத்திலோ, ஐஸ் பெட்டியிலோ வைக்கப்படுகின்றது. அந்த பாத்திரத்தை சுற்றிலும் ஐஸ் கட்டிகளையும், குளிர்ந்த நீரையும் ஊற்றி நிரப்பி வைப்பார்கள். உறுப்புக்கள் உலர்ந்து விடாமல் இருக்கும். ஆனால் உறுப்புகள் விறைத்தும் போகக்கூடாது. இதற்கென்று சில ரசாயன கலவைகள் உள்ளன. சிறுநீரகம், இதயம் போன்ற பெரிய உறுப்புக்களை உடலின் வெப்பத்தை விட, மிக மிக குறைந்த குளிர்ந்த நிலையில் வைத்தாலே போதும்.



தானம் செய்த உறுப்பு சரியாக பொருந்தி, நன்றாக வேலை செய்யுமா?

பொதுவாகவே நம் உடம்பிற்கு ஒரு இயல்பு உண்டு, தன் உடம்பை சேராத எதையும் அது ஏற்றுக் கொள்ளாமல், நிராகரித்து விடும். இதற்கு ரத்தத்திலுள்ள ஆண்டிபயாடிக்ஸ்தான் காரணம். ஆனால் தானமாக பெற்ற உறுப்பை பொருத்துவதற்கு முன்னால் 'ப்ளாஸ்மா பெரிஸிஸ்' என்ற முறையில், ஆண்டிபயாடிக்ஸ்களை எடுத்து விட்டுத்தான் பொருத்துவார்கள். அவ்வாறு, மாற்று உறுப்பு அறுவை சிகிச்சையின் போது, கூடவே மண்ணீரலையும் எடுத்து விடுவார்கள். இதனால் பொருத்தப்பட்ட உறுப்பு நிராகரிக்கப்படுவதில்லை.

சீராட்டி பாராட்டி வளர்த்த நம் உடல், இறந்தபின் மண்ணுக்குள் இருக்கும் புழு, பூச்சிகள் அரித்து வீணாகி போக வேண்டுமா?

மாறாக, பிறந்து, வாழ்ந்து, இறந்த பின்னரும் நாம் தொடர்ந்து இந்த உலகத்தில் பலரின் உடம்பின் மூலம் இந்த உலகத்தில் வாழலாம். ஆகவே, இறந்த பின்னரும் இந்த உலகில் வாழ நாம் செய்ய வேண்டியது, நினைவு உள்ள போதே நம் உடல் உறுப்புக்களை தானம் செய்வதற்கான விருப்பத்தை தெரிவித்து அதற்கென்று உள்ள அடையாள அட்டையை வாங்கி வைத்துக் கொண்டால், நாம் நிச்சயமாக இந்த மண்ணில் என்றென்றும் வாழலாம்.

सत्यमेव जयते
Goverment Of India

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

இளைய பாரதத்தினாய் வா! வா! வா!

இளைஞர்களே!

DDU-GKY திட்டத்தின் ஒருங்கிணைப்பு கூட்டங்களில் பங்கேற்று வாழ்வாதாரம் மேம்பட களம் காண்பீர்!

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தினை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழி தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஊரகப் பகுதி இளைஞர்கள் பயன் பெற்றிடும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதி இளைஞர்கள் தத்தம் தகுதிக்கும் திறனுக்கும் ஏற்ப திறன் பயிற்சியும் வேலைவாய்ப்பும் பெற்று பயன் அடைந்திடும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வட்டார அளவிலும், கிராம ஊராட்சிகளிலும், ஏன் ஒவ்வொரு குக்கிராமங்களிலும் இளைஞர்களுக்கான ஒருங்கிணைப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

வறுமை, வாய்ப்பின்மை, குடும்ப சூழல், பாதுகாப்பின்மை, சமூகப் பிரச்சனை, இடர்பாடு, இயலாமை போன்ற பல்வேறு காரணிகளால் புறந்தள்ளப்பட்டு பள்ளிப் படிப்பை தொடர முடியாத இளைஞர்கள், மேற்படிப்புக்கு செல்லாமல் முடங்கிய இளைஞர்கள், பட்டம் பட்டயம் முதலான படிப்பினை முடித்தும் பாதியில் நிறுத்தியதுமான இளைஞர்கள் என கிராமங்கள் தோறும் பட்டியல் இடப்பட்ட இளைஞர்களை ‘இளைஞர்களுக்கான திறன் முகாம்’ (Youth Skill Mela) என்ற நிகழ்ச்சியில் பங்கேற்க செய்து, தகுதிக்கும் திறனுக்கும் ஏற்ப திறன் பயிற்சியும் வேலைவாய்ப்பும் பெற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வட்டார இயக்க மேலாண்மை அலகு (அலுவலகம்)

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தை செயல்படுத்திட அனைத்து மாவட்டங்களிலும் உள்ள / உருவாக்கப்பட்டுள்ள மாவட்ட இயக்க மேலாண்மை அலகானது தங்களது மாவட்டங்களில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் வட்டார இயக்க மேலாண்மை அலகினை ஏற்படுத்தியுள்ளது. வட்டார இயக்க மேலாளர் (ம) வட்டார ஒருங்கிணைப்பாளர்களைக் கொண்டு இயங்குகின்ற இவ்வலுவலகத்தின் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் தங்களுக்கென பொறுப்பாக்கப்பட்ட கிராம ஊராட்சிகளில் உள்ள இலக்கு மக்கள் குடும்பங்களின் இளைஞர்களின் தகவல்களை அவ்வப்போது தொகுப்பறிக்கையாக்கிட அக்கிராமத்தின் மக்கள் அமைப்பான கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களை வழிநடத்துவர். கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கங்களின் மூலம் பெறப்பட்ட அத்தொகுப்பறிக்கையை அடிப்படையாகக் (ஆதாரமாகக்) கொண்டு திறன் பயிற்சி மூலம் வேலைவாய்ப்பு நாடும் இளைஞர்களை அடையாளம் காண்பர்.

இளைஞர்களுக்கான திறன் முகாம் (Youth Skill Mela)

கிராம ஊராட்சிகள் தோறும் அடையாளம் காணப்பட்ட இளைஞர்களை DDU-GKY திட்டத்தின் மூலம் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற திறன் பயிற்சி (ம) வேலைவாய்ப்பும் பெற்றிட வேண்டி வட்டார அளவிலும், கிராம ஊராட்சிகள் (ம) ஒவ்வொரு குக்கிராமங்களிலும் நடத்தப்படுகின்ற 'இளைஞர்களுக்கான திறன் முகாம்களில் (Youth Skill Mela)' பங்கேற்கச் செய்வர். மகளிர் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் செயல்படுகின்ற மக்கள் அமைப்புகளான கிராம வறுமை குறைப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (ம) சமுதாய வளமையாளர் போன்றோர்களால் ஊரகப் பகுதி இளைஞர்கள் இம்முகாம்களில் பங்கேற்க ஒருங்கிணைக்கப்படுகின்றனர்.

அவ்வாறே மாநில தலைமை அலுவலகத்தால் வளமான எதிர்காலத்தை இளைஞர்கள் பெற்றிட உருவாக்கப்பட்ட தகவல் அழைப்பு மைய தொலைபேசி எண் 04430478047 அச்சிடப்பட்ட சுவரொட்டிகள் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியரகம், மாவட்ட மகளிர் திட்ட அலுவலகம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், கிராம ஊராட்சிகளின் மக்கள் அமைப்பு அலுவலகங்கள் ஆகிய இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன. இதனால் பயிற்சியும், வேலைவாய்ப்பும் நாடும் இளைஞர்கள் தகவல் அழைப்பு மைய தொலைபேசி எண்ணில் பேசி தங்களுக்கான தகவல்களைப் பெற்று மாவட்டத்தின் DDU-GKY திட்டத்திற்கான மகளிர் திட்ட அலுவலகத்தை அணுகுவதும், இளைஞர்களுக்கான திறன் முகாம்களில் பங்கேற்று தங்களுக்கான திறன் பயிற்சி வகையையும், பயிற்சி வழங்கும் நிறுவனத்தையும் அறிகின்றனர் ஆற்றல் பெற்று உயர்கின்றனர்.



(இளைய பாரத வரவேற்பு மேலும் தொடரும்)

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

Empowering Lives

பெரும்பாக்கம் திட்டப் பகுதியில் மறுகுடியமர்த்தப்பட்ட குடியிருப்புவாசிகளுக்கு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தொழில் முனைவோர் பயிற்சி

காஞ்சிபுரம் மாவட்டம், பெரும்பாக்கம் திட்டப் பகுதியில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினால் மறு குடியமர்த்தப்பட்டுள்ள குடியிருப்புவாசிகளின் கூட்டமைப்பின் மூலம் கண்டறியப்பட்டுள்ள மகளிருக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் தொழில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

'திருப்பூரைக் காப்போம்' என்ற தொண்டு நிறுவனத்தின் மூலம் 2019 நவம்பர் 4ம் தேதி முதல் 7ம் தேதி வரை வழங்கப்பட்ட இந்தப் பயிற்சியில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத பொருட்கள் தயாரிப்பது குறித்து பயிற்சி வழங்கப் பட்டது. பேப்பர் பேனா, பேப்பர் பென்சில், பேப்பர் பைகள், பெண்களுக்கான துணி கைப்பைகள் மற்றும் மிதியடி போன்றவை தயாரிக்கக் கற்றுத் தரப்பட்டது. இந்தத் தொழில் பயிற்சிகளின் மூலம் மறுகுடியமர்த்தப்பட்ட குடியிருப்பைச் சேர்ந்த பெண்கள் வீட்டிலிருந்தபடியே பொருட்களைத் தயாரித்து தினசரி ரூ. 200/ வரை வருவாய் பெற்றிட வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. தொழில் முனைவோர் பயிற்சி வழங்கி, பொருட்களை தயாரித்து விற்பனை செய்து, அதன் மூலம் தினசரி வருவாய் பெற்றிட வழிவகை செய்து தந்துள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர் பெரும்பாக்கம் திட்டப் பகுதியில் மறுகுடியமர்த்தப்பட்டுள்ள குடியிருப்பைச் சேர்ந்த பெண்கள்.

சுவையான தின்பண்டங்களைத் தயாரிக்கும் அன்பு மகளிர் சுய உதவிக் குழு

கோயமுத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் உப்பிலியபாளையம் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் அன்பு மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உள்ள 12 உறுப்பினர்களும் ஒற்றுமையுடனும், ஊக்கத்துடனும் செயல்பட்டு தங்கள் குழுவினை வெற்றிகரமாக குழுவாகத் திகழச் செய்து வருகின்றனர். இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து முறுக்கு, தட்டை முறுக்கு, மிக்சர், ராகி வடை, ராகி முறுக்கு, கை முறுக்கு, கம்பு உருண்டை, ரவா லட்டு திணை மாவு, எள்ளுருண்டை ஆகிய தின்பண்டங்களைத் தயாரித்து, தங்கள் பகுதியில் உள்ள வாரச் சந்தை, பள்ளிகள், மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் இதர இடங்களில் விற்பனை செய்து வருவதுடன், மகளிர் திட்ட அலுவலகத்தில் நடைபெறும் மாத ஆய்வுக் கூட்டத்திலும் சப்ளை செய்து வருகிறார்கள். இதன்மூலம் ஒவ்வொரு உறுப்பினரும் மாதந்தோறும் ரூ. 5,000/- வரை வருவாய் ஈட்டி வருகின்றனர்.

தங்களின் தொழிலை மேலும் விரிவாக்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ரூ. 8.50 இலட்சம் வங்கிக் கடனானப் பெற்றுள்ளனர். இதனைக் கொண்டு பெரிய அளவில் தொழில் செய்து, அதன் மூலம் கிடைக்கும் வருவாயில், தங்களின் குழந்தைகளுக்குப் பள்ளி கல்வி கட்டணம், கல்லூரிக் கட்டணம், குடும்ப செலவுகள் போன்றவற்றை மேற்கொண்டு, ஆண்களுக்கு நிகராக வருவாயை ஈட்டி குடும்பத்தை முன்னேற்றம் அடையச் செய்து வருகின்றனர். தங்களுக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர் அன்பு மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள்.

வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி

என் பெயர் தவமணி (க/பெ. சிங்காரவேல்) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கீழ் தென்பாதி கிராமத்தில் வசித்து வரும் நான், சக்தி மகளிர் சுய உதவிக் குழுவில் ஊக்குனராக எனது பணியை துவங்கினேன். அதன் பிறகு சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள், பதிவேடுகள் பராமரிப்பது போன்றவற்றில் ஆர்வத்துடன் ஈடுபட்டதால், சமுதாய வள ஊக்குனராகத் (CRP) தேர்வு செய்யப்பட்டேன். தொடர்ந்து SJSRY திட்டம் மூலம் பல்வேறு ஊக்குனர் பயிற்சிகளிலும், தஞ்சாவூர், திருச்சி, நாகப்பட்டினம் என்று பல மாவட்டங்களில் நடைபெற்ற CRP பயிற்சிகளிலும் கலந்து கொண்டு என் திறனை வளர்த்துக் கொண்டேன்.

சமுதாய வள ஊக்குனராகப் (CRP) பொறுப்பேற்ற நான், இதுவரை 100க்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்களைத் துவக்க உதவியதுடன், அவைகளுக்கு மான்ய கடனாக (SJSRY திட்டம்) ரூ. 4 கோடிக்கும் மேல் பெற்று தந்து இருக்கிறேன். துவங்கப்பட்ட அனைத்து குழுக்களுக்கும் ஆதார நிதியாக தலா ரூ. 1.75 லட்சம் வீதம் பெற்றுத் தந்துள்ளேன். 25 குழுக்களுக்கு பால் மாடு, ஆடு, தையல் இயந்திரம் போன்றவை வாங்க வங்கிக் கடன் பெற்றுத் தந்து அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவி உள்ளேன்.

55 குழுக்களுக்கு ஊக்குனர், பிரதிநிதி பயிற்சி, ALF பயிற்சி போன்றவை அளித்துள்ளேன். புதியதாக துவங்கப்படும் குழுக்களுக்கும் பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகிறேன். குழு நடவடிக்கைகள் மட்டுமின்றி டெங்கு விழிப்புணர்வு, மழை நீர் சேமிப்பு, பெண் கல்வி போன்றவற்றில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறேன். மேலும் பெண்களுக்கு அரசு வழங்கும் சலுகைகள், திட்டங்கள் போன்றவை குறித்து விளக்கி அரசு நலத்திட்ட உதவிகளைப் பெற்றுத் தந்து வருகிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பல்வேறு வகையிலும் உதவி செய்யும் பணியை செய்திட எனக்கு வாய்ப்பளித்த நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வளம் தந்த நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

என் பெயர் ஜானகி, நான் விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் நகராட்சியில் உள்ள கருப்பஞானியர் கோவில் பகுதியில் வசித்து வருகிறேன். எனது குடும்பம் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளது. குறிஞ்சி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினராக இருந்து வரும் நான் சிறிய அளவில் மசால் பொடி தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தேன். எனது தொழிலை சற்று விரிவுபடுத்த வேண்டும் என்ற விருப்பத்தில், சமுதாய அமைப்பாளரின் வழிகாட்டுதலின்படி, கடன் வேண்டி IDBI வங்கியில் விண்ணப்பித்தேன்.

எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு எனக்கு ரூ. 70,000/ கடனாக வழங்கப்பட்டது. அந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு, எனது தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களை கொள்முதல் செய்து அதிக அளவில் மசாலாப் பொடிகள் தயாரிக்கும் தொழிலை சிறப்பாக நடத்தி வருகிறேன். தற்போது என்னுடன் குழுவில் உள்ள 2 நபர்களும் சேர்ந்து இத்தொழிலை செய்து வருகின்றோம். எங்களுக்கு தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் உணவு பாதுகாப்பு சான்றிதழ் வாங்கி தரப்பட்டுள்ளது.

இத்தொழிலில் மாதம் ஒன்றிற்கு ரூ. 7500/ வரை எங்கள் ஒவ்வொருவருக்கும் வருமானம் கிடைக்கிறது. வங்கிக் கடனையும் தவணை தவறாமல் கடனும் செலுத்தி வருகின்றோம். இத்தொழில் மூலம் எங்களுடைய வாழ்க்கை தரம் உயர்ந்துள்ளது. எங்களது வளர்ச்சிக்கு உதவிய மகளிர் திட்டத்திற்கும், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கும் எங்களது நன்றியை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்றக் கச்சேரி 2.0

அன்புள்ள முற்றம் வாசகர்களே

சுய உதவிக் குழுவின் ஊக்குனரான மதி, உறுப்பினர்களான கீதா, பாலா, உமா மற்றும் மங்கை ஆகியோரிடையே நடைபெறும் உரையாடல்கள் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த விபரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் முற்றக் கச்சேரி வெளியிடப்படுகிறது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம். இனி முற்றக் கச்சேரிக்குள் போவோமா...

இடம் : சுய உதவிக் குழு அலுவலகம்

கதை மாந்தர்கள் : ஊக்குநர் மதி, உறுப்பினர்கள் பாலா, கீதா, மங்கை மற்றும் உமா

ஊக்குனரான மதி சுய உதவிக் குழு அலுவலகத்தில் பதிவேடுகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அப்போது சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களான பாலா, கீதா, மங்கை மற்றும் உமா ஆகியோர் வருகின்றனர்.

மதி : *வாங்க... வாங்க...*

பாலா : *என்னக்கா எல்லோரையும் எதுக்கு உடனே வரச் சொன்னீங்க?*

மதி : *நம்ம மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பா செயல்படுத்தற ஒரு இயக்கத்தைப் பத்தி உங்களுக்குசொல்லத்தான் உங்கள வரச்சொன்னேன்.*

உமா : *அது என்ன இயக்கம் அக்கா?*

மதி : *நம்ம நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்தான்*

கீதா : *நான் கூட கேள்விப்பட்டேன் அக்கா, நகர்ப்புறத்துல இருக்கிற ஏழைகளுக்காக இந்த இயக்கம் செயல்படுதுன்னு.*

மதி : *சரியாச் சொன்ன பாலா, ஆனா ஏழைகளுக்காக மட்டும் இந்த இயக்கம் செயல்படல.*

மங்கை : *யாருக்கெல்லாம் இந்த இயக்கம் செயல்படுது அக்கா?*

பாலா : *நகர்ப்புறத்துல இருக்கிற நலிவுற்றவர்கள், சாலையோர வியாபாரிகள், திருநங்கையர், வீடற்றவர்கள், ஆதரவற்றவர்கள் என அனைவருக்கும் இந்த இயக்கம் செயல்படுதுன்னு, நான்கூட கேள்விப்பட்டேன்.*

உமா : *நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தைப் பத்தி கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க அக்கா.*

மதி : *கண்டிப்பா சொல்றேன். கிராமத்துல இருக்கற ஏழைகளுக்கு உதவி செய்ய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஒத்தத் தொழில் குழு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புன்னு இருக்குது.*

கீதா : *ஆமா, நம்ம குழு கூட கூட்டமைப்புலதான இருக்கு?*

மதி : *கிராமப்புறத்துல செயல்படற வாழ்வாதார இயக்கம் மாதிரி நகர்ப்புறத்துல இருக்கிற ஏழைகளோட வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக துவக்கப்பட்ட இயக்கம்தான் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்.*

பாலா : அப்படியா? ரொம்ப நல்லா இருக்கே.

மதி : இந்த இயக்கத்தின் மூலமாக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுது.

உமா : என்ன திட்டங்களெல்லாம் செயல்படுத்திட்டு வராங்க?

மதி : தெருவோர வியாபாரிகளின் மீது கவனம் செலுத்தி அவர்களது வியாபாரத்திற்கான இடம், அரசு வழங்கும் அடையாள அட்டை, வங்கிக் கடன் வசதி, திறனாக்கம், சமூகப் பாதுகாப்பு போன்றவற்றை ஏற்படுத்தித் தராங்க.

பாலா : அப்புறம்...

மதி : நகர்ப்புறங்களில் உள்ள ஏழைப் பெண்களை ஒன்றிணைத்து சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, அவர்களுக்குத் தேவையான தொழிப்பயிற்சிகள் தராங்க. வங்கிக் கடன் வாங்கிக் கொடுத்து சுய தொழில் செய்ய ஊக்குவிக்கறாங்க. வேலைவாய்ப்பும் பெற்றுத் தராங்க.

மங்கை : என் தங்கச்சிக் கூட இதுல இணைஞ்சி தொழிற்பயிற்சி பெற்றிருக்கா.

கீதா : என்ன பயிற்சி பெற்றிருக்கா?

மங்கை : என் தங்கச்சி சென்னை பக்கத்துல இருக்கிற பெரும்பாக்கம் மறுகுடியமர்த்தப்பட்ட குடியிருப்புல இருக்கா. அங்க செயல்படுற பகுதி அளவிலான கூட்டமைப்புல இருக்கறவங்களுக்கு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் தரப்பட்ட தொழிற்பயிற்சியில கலந்துகிட்டு, பேப்பர் கப், பேப்பர் பைகள் போன்றவை தயாரிக்கிற பயிற்சி பெற்று, இப்ப போதுமான வருமானமும் சம்பாதிக்கிறா.

பாலா : ரொம்ப நல்லா இருக்கே. இதுமட்டும்தானா இல்ல இன்னும் இருக்கா?

மதி : போதுமான அடிப்படை வசதிகளுடன் நிரந்தரமான வாழ்விடங்களை நகர்ப்புற வீடற்றவர்களுக்கு பல்வேறு கட்டங்களாக இந்த இயக்கத்தின் கீழ் ஏற்படுத்தித் தராங்க.

கீதா : அப்படியா...?

மதி : ஆண்களுக்குத் தனியாகவும், பெண்களுக்குத் தனியாகவும், குடும்பத்தோட இருக்கிறவங்களுக்குத் தனியாவும் தங்குமிடம் ஏற்படுத்தித் தராங்க. அந்த இடங்கள் எல்லா அடைப்படை வசதிகளும் கொண்டதாகவும் இருக்கும்.

உமா : அட பரவாயில்லையே...

மதி : அதுமட்டுமில்ல, குழந்தைகள், மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள், முதியோர்கள், உடல் நலம் குன்றிய நோயாளிகள், திருநங்கையர் என அனைவருக்கும் தனித்தனியா சிறப்பு வாழ்விடங்கள் ஏற்படுத்தித் தரப் போறாங்க.

மங்கை : நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ரொம்ப நல்ல இயக்கம்தான்.

மதி : அட இன்னும் இருக்கு கேளுங்க. நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், நகர்ப்புற ஏழைகளாக உள்ள தனிநபர்கள் மற்றும் குழுக்களில் உள்ளவர்களுடைய திறமை, பயிற்சி மற்றும் உள்ளூர் சூழ்நிலைக்கேற்ப சுய வேலைவாய்ப்புக்குரிய சிறு தொழில்களைத் தொடங்குவதற்கான நிதியுதவியை வங்கிகள் மூலமா பெற்றும் தரப்போறாங்க. நகர்ப்புற ஏழைகள் தனி நபராகவோ அல்லது சுய உதவிக் குழுக்களின் மூலமாகவோ பெறப்படும் வங்கிக் கடனை முறையாக திருப்பிச் செலுத்துனா, வட்டி மானியமும் தருவாங்களாம். அதுபத்தி அப்புறமா விளக்கமா சொல்றேன்.

உமா : அடேங்கப்பா... கேக்கும் போதே நல்லா இருக்கே...

மதி : இதுமட்டுமில்லை, வாழ்வாதாரத்திற்காக, சிறுதொழிலில் ஈடுபடும் தனிநபர்கள், குழுக்கள், சுய உதவிக் குழுக்கள், தெருவோர வியாபாரிகள் போன்றவர்களுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகள் மற்றும் சந்தை வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கப்படும். மேலும் தொழில் முனைவோர்களுக்குத் தேவையான நடைமுறை மூலதனத்திற்கு ஏற்ப வங்கிக் கடன் அட்டை கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

கீதா : இந்தத் திட்டங்கள செயல்படுத்தினாலே வறுமை தீர்ந்திடுமே.

பாலா : சரியா சொன்ன கீதா.

மதி : நீங்க சொல்லறது ரொம்ப சரி. நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பா நகர்ப்புற வாழ்வாதார மையங்களும் உருவாக்கியிருக்காங்க. அதைப்பத்தி தெரியுமா உங்களுக்கு?

உமா : நகர்ப்புற வாழ்வாதார மையமா... அது என்னா?

மதி : அதாவது நகர்ப்புறங்களில் சில இடங்களில் நகர்ப்புற வாழ்வாதார மையம் தொடங்கப்படும். இதன் மூலம் அப்பகுதியில் உள்ள மக்களின் அடிப்படை வசதிகள், வருவாய் போன்றவைகளுக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுது.

உமா : அடிப்படை வசதி, வருவாய்க்குத் தேவையான நடவடிக்கையா? அதப் பத்தியும் கொஞ்சம் சொல்லலாமே...

மதி : இன்னைக்கு வங்கிக்கு போகணும். அதனால அடுத்த முறை சந்திக்கும் போது விவரமா, விரிவா எல்லாத்தப் பத்தியும் சொல்றேன்.

பாலா : சரிக்கா... நாங்க கிளம்பறோம்...

மங்கை, பாலா, கீதா மற்றும் உஷா ஆகியோர் மதியிடம் விடைபெற்று, தங்களின் வீடுகளுக்குச் செல்கின்றனர்.

(முற்றக் கச்சேரி தொடரும்)

திருநங்கையர் நடத்தும் ஏஞ்சல் சுய உதவிக் குழு கடை

சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழ்பவர்கள் திருநங்கைகள். மத்திய அரசின் 'மாற்றுப் பாலினத்தவர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு மசோதா 2016'ல் எந்த அமைப்புகளும் மாற்றுப்பாலினத்தவர்களைப் புறக்கணிக்கக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சமீபகாலமாக திருநங்கைகள் பலரும் தங்களின் ஆளுமையைச் சமூகத்தில் தைரியமாக வெளிப்படுத்தி, அவர்களின் இருப்பை அழுத்தமாகப் பதிவு செய்து வருகின்றனர். தமிழகத்தில் புதிய முயற்சியாக, முதல்முறையாக மகளிர் திட்டத்தின்கீழ், திருநங்கைகள் இடம் பெற்றுள்ள சுயஉதவிக்குழு அங்கீகரிக்கப்பட்டு, அவர்களுக்குத் தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் திருச்சி பாரதிதாசன் சாலையில் அமைந்துள்ள பூமாலை வணிக வளாகத்தில் 'ஏஞ்சல் சுய உதவிக்குழு கடை' திருநங்கையர்களால் நடத்தப்பட்டு வருகிறது. இந்தக் கடையில் குளிர்பானப் பொருள்கள் மற்றும் ஃபேன்சி பொருள்கள் விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து அந்தக் கடையை நடத்தி வரும் திருநங்கை செல்வி கூறும்போது, "எனக்குச் சொந்த ஊரே திருச்சிதான். நான் பதினாறு வயசுலயே வீட்டைவிட்டு வெளியே வந்துட்டேன். அதற்குப் பிறகு மும்பை, டெல்லின்னு என் வாழ்க்கையை ஓட்டிட்டேன். சில ஆண்டுகளுக்கு முன் திரும்பவும் நான் திருச்சிக்கே வந்துட்டேன். வாழ்க்கையின் மீது ஒரு பிடிப்பே இல்லாம இருந்துச்சு. அப்போதான், பியூட்டிஷன் காஜலைச் சந்திச்சேன். இந்தச் சுய உதவிக் குழுவைத் தொடங்கினோம். மகளிர் திட்டத்தின் மூலம் எங்களுக்கு இந்த பூமாலை வணிக வளாகத்துல கடை தந்திருக்காங்க. இந்தக் கடையில குளிர்பானப் பொருள்கள் மற்றும் ஃபேன்சி பொருள்கள் போன்றவற்றை விற்பனை செய்கிறோம். நிறைய வாடிக்கையாளர்கள் எங்க கடைக்கு வர்றாங்க. இப்போ நிம்மதியா வாழ்ந்திட்டு இருக்கோம்" என்றார்.

மற்றொரு திருநங்கையான கஜோல் கூறும்போது, "திருநங்கைகளுக்குன்னு சுய உதவிக் குழு ஒன்றை ஆரம்பிச்ச எங்களுக்கு, திருச்சி மாவட்ட ஆட்சியர் திரு. ராசாமணி, இ.ஆ.ப., அவர்களின் ஆலோசனையின் பேரில் திருச்சி மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திரு. பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி எங்களுக்கு இந்தக் கடை ஒதுக்கப்பட்டது. கடையை 'ஏஞ்சல் சுயஉதவிக் குழு' என்ற பெயரிலேயே ஆரம்பிச்சோம். செல்வி, சகாயமேரி, காயத்ரி, சரண்யா பேகம் மற்றும் சுதான் என ஐந்து திருநங்கைகள் இந்தக் கடையில் வேலை பார்க்குறாங்க. நான் ஒரு பியூட்டிஷன். மத்த ஐந்து பேருக்கும் இந்த மாதிரி கடை நடத்துறது புதுசுங்குறதால அவங்களுக்கு துணையாக இருக்கலாம்னு இந்தக் கடையைப் பாத்துக்குறேன். கடை நல்லா போயிட்டுருக்கு. எங்களுக்கு வாழ்வாதாரம் தந்த தமிழ்நாடு அரசுக்கும், திருச்சி மாவட்ட நிர்வாகம் மற்றும் மகளிர் திட்டத்திற்கும் நன்றி" என்று கூறினார்.

திருநங்கையர் தற்போது படித்து பட்டதாரி ஆனாலும், அவர்கள் குறித்த பார்வை முற்றிலுமாக மாறிவிடவில்லை. எனினும், இதுபோன்று ஆங்காங்கே நடக்கும் சில அபூர்வ நிகழ்வுகள், திருநங்கையரின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன், அவர்களுக்கு எதிர் காலம் குறித்த நம்பிக்கையையும் தருகின்றன.



■ புதுக்கோட்டை மாவட்டம்

முனீஸ்வரர் சுய உதவிக் குழுவின் வெற்றி கதை

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், ஒன்றியம் ஆளப்பிறந்தான் களப்பகுதியில் உள்ள பஞ்சாத்தி ஊராட்சி பருத்தினி கிராமத்தில் 15 நபர்கள் கொண்ட முனீஸ்வரர் சுய உதவிக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் பல்வேறு வேலைகளுக்குச் செல்கின்றனர். மாலை நேரங்களில் தங்கள் வீட்டின் அருகில் உள்ள இடத்தில் மாலை பொழுதில் ஓலை பெட்டி, பாய் மற்றும் முறம் பின்னுதல் போன்றவற்றை சிறிய அளவில் செய்து வருகின்றனர். தேவையான முதலீடு இல்லாததால் பெரிய அளவில் தொழில் செய்ய முடியாமல் சிரமப்பட்டு வந்தனர்.

இந்நிலையில், உலகளந்தான்வயல் கிளை PACCS வங்கியில் நேரடிக் கடனாக ரூ. 1,00,000/- பெற்று அத்தொகையினை இக்குழுவில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் தொழில் அளவிற்கு ஏற்ப கடன் தொகையினை பிரித்து எடுத்து தொழிலில் முதலீடு செய்து சிறப்பாக செய்து வருகின்றனர். இக்குழுவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை அருகில் உள்ள ஊர்கள், வெளியூர்கள் மற்றும் உள்ளூர் சந்தை ஆகியவற்றில் விற்பனை செய்து வருவாய் ஈட்டுகின்றனர். இதன் மூலம் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருகின்றனர். தாங்கள் பெற்றுள்ள வங்கி கடன் தொகையை முழுமையாக திரும்ப செலுத்தி விட்டனர்.

தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட வழிகாட்டிய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு தங்களின் நன்றியை முனீஸ்வரர் சுய உதவிக் குழுவினர் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றனர்.

■ தருமபுரி மாவட்டம்

புளி பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டு வரும் அவ்வை மகளிர் சுய உதவிக் குழு

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், மாதேஅள்ளி ஊராட்சி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். இந்த கிராமத்து மக்கள் மக்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு, புளி பதப்படுத்துதல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில் இப்பகுதியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் சுய உதவிக் குழுக்கள் துவங்குவது குறித்த விழிப்புணர்ச்சி வழங்கப்பட்டது. அதன் விளைவாக இங்கு கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், சுய உதவிக் குழுக்கள் போன்றவை துவங்கப்பட்டன.

புளி பதப்படுத்தும் தொழிற்சாலையில் தினக்கூலிக்கு பணியாற்றி வந்த 20 பெண்கள் ஒன்றிணைந்து வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் அவ்வை மகளிர் சுய உதவிக் குழுவினைத் துவங்கி, புளி பதப்படுத்தும் தொழிலை மேற்கொண்டனர். மொத்தமாக புளியைக் கொள்முதல் செய்து, அதை சுத்தப்படுத்தி, பதப்படுத்தி விற்பனை செய்யத் துவங்கினர். இவர்கள் தயாரிக்கும் புளியை சேலம் லீபஜாரில் உள்ள மொத்த வியாபாரிகள் வாங்கிக் கொள்கின்றனர். குழுவினரே சில்லறையாகவும் விற்பனை செய்கின்றனர்.

மேலும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் நடைபெறும் மாவட்ட மற்றும் மாநில அளவில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகள், அகில இந்திய அளவில் நடைபெறும் சாராஸ் கண்காட்சி போன்றவற்றில் தங்களின் உற்பத்திப் பொருளை விற்பனை செய்கின்றனர்.

குறைந்த கூலிக்கு வேலை செய்து வந்த தங்களை தொழில் முனைவோர்களாக மாற்றி, மாதந்தோறும் கணிசமான அளவில் வருவாய் பெற்றிட வழிவகுத்துக் கொடுத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றனர் அவ்வை மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள்.

■ திருவாரூர் மாவட்டம்

வாழ்வாதாரம் தந்த வாழ்வாதார இயக்கம்

திருவாரூர் மாவட்டம், திருக்களார் ஊராட்சி, தெற்கு வெளி கிராமத்தில் வசித்து வரும் திருமதி. அமிர்தவள்ளி, க/பெ. தங்கையன் என்பவர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் வாழ்வாதாரம் பெற்றுள்ளார். இதுகுறித்து திருமதி அமிர்வள்ளி கூறும்போது, `நான் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவள். எங்கள் பகுதியில் செயல்பட்டு வரும் அன்னை தெரசா மகளிர் சுய உதவிக் குழுவில் நான் உறுப்பினராக உள்ளேன். சுய தொழில் செய்ய விரும்புபவர்களுக்குத் தேவையான கடனுதவி வழங்குவதாக எனது குழுவில் தெரிவித்தனர். நானும் சுய தொழில் செய்ய விரும்பி கடனுதவி கேட்டு விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, எனக்கு ரூ. 25,000/ கடனுதவி வழங்கப்பட்டது. அந்தத் தொகையைக் கொண்டு அமிர்தா என்ற பெயரில் கயிறு சென்டர் ஒன்றை ஆரம்பித்தேன். இதன் மூலம் தற்போது எனக்கு மாதந்தோறும் கணிசமான வருவாய் கிடைக்கிறது. என்னுடைய குடும்பத்தின் வறுமையும் நீங்கி வருகிறது. எனக்கு வருவாய் கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த மகளிர் திட்டத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகள்' என்று குறிப்பிட்டார் திருமதி. அமிர்தவள்ளி.

■ திருச்சி மாவட்டம்

மகளிர் திட்டத்திற்கு நன்றி

எனது பெயர் ஸ்டார் சகாய ஜெனிட்டா. கைம்பெண்ணான நான் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் வட்டாரம், நாகமங்கலம் பகுதியில் உள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் குடியிருப்பில் வசித்து வருகிறேன். கால் ஊனமுற்ற மாற்றுத் திறனாளியான எனக்கு 15 வயதில் ஒரு மகள் இருக்கிறார். மிகவும் ஏழ்மையில் இருந்த நான், ரோஜா மாற்றுத் திறனாளி குழுவில் உறுப்பினராக இணைந்து தற்போது 10 வருடமாகிறது. நான் வங்கியின் மூலம் கடனுதவி பெற்று ரூ. 1,50,000/முதலீடு செய்து பூமாலை வணிக வளாகத்தில் கணினி மற்றும் ஜெராக்ஸ் கடை வைத்து நடத்தி வருகின்றேன். இந்தக் கடையின் மூலமாக மாதந்தோறும் கணிசமான அளவு வருவாய் கிடைக்கிறது. மேலும் இந்தக் கடையில் ஸ்டேஷனரி பொருட்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் ஊதுபத்தி, பினாயில் போன்ற பொருட்களையும் விற்பனை செய்து வருகின்றேன். எனக்கு பூமாலை வணிக வளாகத்தில் கடை ஒதுக்கீடு செய்து தந்த மகளிர் திட்டத்திற்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

■ இராமநாதபுரம் மாவட்டம்

டீக்கடை மூலம் வளமான வாழ்வு

இராமநாதபுரம் மாவட்டம், ஆர். எஸ். மங்களம் ஒன்றியம், காவனக்கோட்டை ஊராட்சியை சேர்ந்த கொக்கூரணி கிராமத்தில் லூர்து மாதா மகளிர் சுய உதவிக் குழு 15 பெண் உறுப்பினர்களைக் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த குழுவின் உறுப்பினரான இருக்கும் என் பெயர் ஜெசிந்தராணி (க/பெ. செல்வராஜ்). எனது கணவர் தினக்கூலி வேலை செய்து குறைவான கூலி பெற்று அதன் மூலம் குடும்பத்தை கவனித்து வந்தார். போதிய அளவு வருமானம் இல்லாததால் எனது குடும்பம் மிகவும் வறுமையில் இருந்து வந்தது.

இந்நிலையில் நான் உறுப்பினராக உள்ள எனது குழுவின் மூலம் கூட்டமைப்பில் தனிநபர் கடனாக ரூ. 50,000/–ம் பெற்று, அதை மூலதனமாக வைத்து, எனது கிராமத்தில் சிறிய அளவில் டீக்கடை ஒன்றை வைத்து தொழில் செய்து வருகிறேன். தற்போது நாள் ஒன்றுக்கு ரூ. 600/–வரை வருவாய் பெற்று வருகிறேன். இதன் மூலம் எனது குடும்பத்தின் வறுமை நீங்கி உள்ளது. எனது வாழ்வில் வளம் சேர்த்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

■ கன்னியாகுமரி மாவட்டம்

இ-சேவை மையத்தால் கிடைத்த வாழ்வாதாரம்

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், மேல்புறம் ஊராட்சி ஒன்றியம் முழுக்கோடு கிராமத்தில் வசித்து வரு என் பெயர் ஜெபந்தா. எனது குடும்பம் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பமாகும். வறுமையின் காரணமாக 10ம் வகுப்பு வரை பள்ளியில் படித்த நான், மேற்கொண்டு படிக்க முடியாமல், கூலி வேலைக்கு சென்று வந்தேன். பின்னர் தனித்தேர்வு முறையில் 12ம் வகுப்பும், தொலைதூரக் கல்வியாக பட்ட படிப்பும் படித்து தேர்ச்சி பெற்றேன். அதன் பிறகு COMPUTER (COA), PGDCA, TYPEWRITTING (TAMIL and ENGLISH) படித்து தேர்ச்சி பெற்றேன்.

திருமணத்திற்கு பிறகு நான் சுய உதவி குழுவில் உறுப்பினராக சேர்ந்தேன். அப்போதுதான் மாற்றுத் திறனாளி பயிற்றுனர் வேலை உள்ளதாகக் கேள்விப்பட்டு அதில் சேர்ந்து, மாற்றுத் திறனாளிகளைக் கண்டறிந்து அவர்களை குழுவாக இணைத்து, கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் கடன் பெற்றுத் தந்து, அவர்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கு உதவி செய்து வந்தேன்.

பிறகு கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் மேல்புறம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் செயல்படும் இசேவை மையத்தில் கணினி இயக்குபவர் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டேன். இப்பணியில் ஆரம்பத்தில் குறைவான வருவாயே கிடைத்தது. பின்னர் இசேவை மையம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதால், அதிக அளவில் மக்கள் இசேவை மையத்தினைப் பயன்படுத்தத் துவங்கினர். படிப்படியாக, சேவை மையம் நன்றாக செயல்படத் துவங்கியது. இப்பொழுது எனக்கு மாதந்தோறும் சராசரியாக ரூ. 15,000/– வரை வருவாய் கிடைக்கிறது.

எனது வாழ்வாதாரத்தை வளம் மிக்கதாக மாற்றிய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கும், எங்கள் பகுதி கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்.

புதிய தரிசனம்

விதிகளை மீறிய
காலைப் பொழுதில்
அழுகையை நிறுத்தி
எனக்குள் பயணமானேன்...

மூன்றாவது கை
தென்பட்டது
அது– தன்னை
நம்பிக்கை என அறிமுகமானது...

அடுப்பங்கறைக்குள்
புழுங்கிய நாட்கள்
விடுதலை அடைந்தன...

சுயமாய் தொழில் செய்ய
குழுக்களாய் மாறினேன்...
உழைப்பின் மறுமுனையில்
சுயமரியாதை நிமிர்ந்து நின்றது...

கணவன்– உறவு
நட்பாய் மாறியது...
புதிய தரிசனம்
எனக்குள்...!
நான் படைப்பதால்
இறைவன் நானே...!

–ராசி அழகப்பன்

பெண்களின் பொருளாதார வளர்ச்சியில் இருசக்கர வாகன மானியம் வழங்கும் திட்டம்

பணிபுரியும் மகளிர் தங்களின் பணியிடங்களுக்குச் சிரமமின்றி சென்று வர ஏதுவாக இருசக்கர வாகனங்கள் வாங்கிட, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வாயிலாக மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே நம் மாநிலத்தில் மட்டுமே செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் இதுவரை பல்லாயிரக்கணக்கான பெண்கள் மானிய விலையில் இருசக்கர வாகனங்களைப் பெற்று பயனடைந்துள்ளனர். பெண்களின் வளர்ச்சிக்கு திருப்புமுனையாக உள்ள இத்திட்டத்தினால் பயனடைந்துள்ள பெண்களின் மகிழ்ச்சியை நாமும் பகிர்ந்து கொள்வோம் வாருங்கள்.

எனது பெயர் தமிழ்செல்வி. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டாரம் கருவேப்பம்பட்டி ஊராட்சி, ஆத்தூராம்பாளையம் குக்கிராமத்தில் வசித்து வரும் நான், திருச்செங்கோடு ஒன்றியத்தில் சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளராக பணியாற்றுகிறேன். எனக்கு 4 ஊராட்சிகளில் உள்ள 4 வங்கிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக தினமும் 15 கிலோ மீட்டர் தூரம் பேருந்தில் சென்று பணியாற்றி வந்தேன். இது எனக்கு மிகவும் சிரமமாக இருந்தது. மேலும் குறிப்பிட்ட நேரத்தில் செல்ல முடியாமலும் இருந்து வந்தேன். இந்நிலையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் இருசக்கர மானியம் வழங்கும் திட்டத்தில் பயனாளியாக தேர்வு செய்யப்பட்ட எனக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது. இருசக்கர வாகனம் வாங்கியுள்ளதால் வங்கிகள் மற்றும் குக்கிராமங்களுக்கு சென்று வர மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இதனால் குறிப்பிட்ட நேரத்தில் வங்கிக்கும் கிராமத்திற்கும் சென்று எனது பணியை விரைவாக செய்ய முடிகிறது. இதற்கு காரணமான தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாலவாடி ஊராட்சியில் வசித்து வரும் என் பெயர் விஜயலட்சுமி (க/பெ. சரவணன்), நான் தனியார் மருத்துவமனையில் செவிலியராக பணியாற்றி வருகிறேன். தினமும் எனது வீட்டில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று இரண்டு பேருந்தில் பயணித்து நான் பணிபுரியும் மருத்துவமனைக்குச் சென்று வந்தேன். சீக்கிரமே பணிக்கு செல்ல வேண்டியிருந்ததால் வீட்டு வேலை, குழந்தைகள் பராமரிப்பு என் எதிலும் என்னால் கவனம் செலுத்த முடியவில்லை. இந்நிலையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் பயனாளியாக நான் தேர்வு செய்யப்பட்டேன். இருசக்கர வாகனம் வாங்க எனக்கு ரூ. 25,000/ மானியம் வழங்கப்பட்டது. தற்போது நான் இருசக்கர வாகனத்தில் எனது பணிக்கு சரியான நேரத்தில் சென்று வருகிறேன். எனது குடும்பத்தினருடன் என்னால் நிறைய நேரம் செலவழிக்க முடிகிறது. எனக்கு இருசக்கர வாகனம் வழங்கிய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்து கொள்கிறேன்.

என் பெயர் பிரியா (க/பெ. அன்பரசன்). திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டாரம், நடுவாக்கோட்டை ஊராட்சியில் வசித்து வரும் நான், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் CRPயாக செயல்பட்டு வருவதுடன், மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராகவும் உள்ளேன். மிதிவண்டி மூலம் தினமும் குழந்தைகளை பள்ளியில் விட்டு விட்டு, எனது பணிகளை மேற்கொள்ள பல இடங்களுக்கும் மிதிவண்டியிலேயே செல்ல வேண்டி இருந்தது. இது எனக்கு மிகவும் சிரமமாக இருந்ததுடன், எனது பணியிலும் கால தாமதம் ஏற்பட்டது. இந்நிலையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் மானியத்துடன் கூடிய இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ் எனக்கு இருசக்கர வாகனம் ரூ. 25,000/ மானியத்தில் வழங்கப்பட்டது. எனது குழந்தைகளை பள்ளியில் விட்டு விட்டு எனது வேலைகளையும் விரைவாக செய்து முடிக்க இருசக்கர வாகனம் பெரிதும் உதவியாக உள்ளது. எனக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கிய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் வட்டாரம், அத்திக்குளம் கிராமம் மேலத் தெருவில் வசித்து வரும் என் பெயர் கனகலட்சுமி, மாற்றுத் திறனாளியான நான் தினமும் 8 கி.மீ. தூரம் பேருந்தில் சென்று வேலை செய்து வந்தேன். எனது பகுதியில் இருந்து குறிப்பிட்ட நேரத்திற்கு தான் பேருந்துகள் இயங்கும் என்பதால் கூட்டமும் அதிகமாக இருக்கும். இந்நிலையில் என்னால் பேருந்தில் வேலைக்குச் சென்று வருவது மிகவும் சிரமமாக இருந்தது. இந்நிலையில் மகளிர் திட்டம் மூலம் மானிய விலையில் இருசக்கர வாகனம் பெற விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, எனக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது. தற்போது நான் தினமும் சிரமமின்றி வேலைக்குச் சென்று வருவதுடன், பிற இடங்களுக்கும் சென்று வருகிறேன். மாற்றுத் திறனாளியான எனக்கு மானிய விலையில் வாகனம் வழங்கிய தமிழ்நாடு மகளிர் திட்டத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை நகராட்சியைச் சேர்ந்த தேனிமலை பகுதியில் வசித்து வரும் என் பெயர் மங்கையர்கரசி. நான் எனது வீட்டிலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் துணிக்கடை ஒன்றில் பணிபுரிந்து வருகிறேன். ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த நான் வேலைக்கு செல்வதன் மூலத்தான் எனது குடும்பத்தின் வறுமையை சற்று குறைக்க முடியும். போக்குவரத்து குறைவாக இருப்பதால் வேலைக்கு செல்வதற்கு தினமும் சிரமப்பட்டு வந்தேன். சொந்தமாக இருசக்கர வாகனம் வாங்குவது என்பது ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த எனக்கு கனவாக இருந்தது. இந்நிலையில் இருசக்கர வாகனம் வாங்க ரூ. 25,000/ மானியம் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தத் தொடங்கியது. நான் மானிய விலையில் இருசக்கர வாகனம் வாங்க விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு எனக்கு இருசக்கர வாகனம் வாங்க ரூ. 25,000/ மானியம் வழங்கப்பட்டது. இப்போது நான் இருசக்கர வாகனம் வாங்கியுள்ளேன். எனது கனவினை நிறைவேற்றிய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு எனது நன்றியினை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் குறித்து அறிந்து கொள்வோம்...!

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டமானது (TNRTP) உலக வங்கியின் நிதி உதவியுடன் தொடங்கப் பட்ட ஒரு தனித்துவம் வாய்ந்த திட்டமாகும். இத் திட்டம் வறுமை ஒழிப்பையும் தாண்டி தொழில் மேம்பாடு, நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் ஊரக சமுதாயத்தில் வளம் மற்றும் நிலைத்த உயர்வினை உருவாக்கி பெரும் மாற்றத்தை ஏற்படுத்து வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டம் (TNPVP), தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) மற்றும் தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் (NRLP) ஆகிய திட்டங்களின் வாயிலாக ஏற்படுத்தப்பட்ட பல்வேறு முதலீடுகள் மற்றும் சமுதாய அமைப்புகளின் மூலதனங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன் நிறைவேற்றப்பட்ட புதுவாழ்வுத் திட்டத்தின் வெற்றியை ஆதாரமாகக் கொண்டு துவங்கப்பட்ட திட்டமாகும். இத்திட்டமானது 26 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில் 3,994 ஊராட்சி களில் இரண்டு கட்டங்களாக 6 வருடங்களில் சுமார் ரூ. 918.20 கோடி மதிப்பீட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் ஊரகத் தொழில் முனைவுகளை உரு வாக்குதல், நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்கச் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டினை 70:30 என்ற விகிதத்தில் உலக வங்கியும் தமிழ்நாடு அரசும் வழங்கும்.

முந்தைய திட்டங்களால் உருவாக்கப்பட்ட சொத்துக்கள், வளங்கள் மற்றும் திறன்களை கொண்ட சுய உதவிக்குழு உறுப்பினர்களின் குடும்பங்களே இத்திட்டத்தின் முதன்மை இலக்கு ஆவர். இத் திட்டத்தில் பெண்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள், இளைஞர்கள் மற்றும் ஆர்வ முள்ள தொழில் முனைவோர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் உள்ள வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாரா துறைகளை சேர்ந்த உற்பத்தியாளர்கள் இணைந்த குழு, கூட்டமைப்புகள் மற்றும் தொழில் முனைவோர்கள் ஆகியோர் பயன் பெறுவர். இத்திட்டத்தின் மூலம் 4,11,620 நேரடிப் பயனாளிகள் பயன் பெறுவர்கள். இவர்களில் 3,25,000 பயனாளிகள் மூலம் தொழில் குழுக்கள், உற்பத்தியாளர்கள் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு அமைக்கப் படும். மேலும் 6,620 தனிநபர் தொழில் முனைவோர்கள் மற்றும் தொழில் திறன் பயிற்சிக்கென 80,000 பயனாளிகள் (40,000 பயனாளிகளுக்கு ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள அரசின் முக்கிய தொழில் திறன் பயிற்சி திட்டங்கள் ஒருங்கிணைப்பின் மூலமும் 40,000 பயனாளிகளுக்கு சமுதாய திறன் பயிற்சி/ பண்ணைப் பள்ளிகள் மூலமும்) பயன்பெறுவார்கள்.

தமிழ்நாடு ஊரக புத்தக்கத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

அ. ஊரகத் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற சூழல் மேம்பாடு

கிராமப்புறங்களில் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற சூழல்களை உருவாக்குதல், மாவட்டத்தில் பல்வேறு தொழில் வாய்ப்பிற்கான ஆய்வுகள் மேற்கொள்ளுதல், மக்கள் பங்கேற்புடன் கூடிய சாத்திய கூறுகள் மிக்க தொழில் வகைகளைக் கண்டறிதல், ஊரக தொழில்களை மேம்படுத்துதல் (குழு மற்றும் தனிநபர்), ஏற்கனவே உள்ள ஊரக தொழில்களை வலுப்படுத்துதல், சந்தை வாய்ப்புகள் மற்றும் மதிப்பு தொடர் வாய்ப்புகளை கண்டறிதல், தொழில் வளர்ச்சிக்கான அடிப்படை சேவைகளை வழங்குதல் மற்றும் தொழில்களின் நிலைத்த தன்மையை உருவாக்குவதற்காக சிறந்த வழிமுறைகளை தெரிவித்தல், மகளிரால் நடத்தப்படும் நிறுவனங்கள் மற்றும் சுற்றுசூழலுக்கு ஏற்ற பசுமை சார்ந்த நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும்.

ஆ. தொழில்களுக்கான திட்டம் தயாரித்தல் மற்றும் நிதி வழங்கல்

கிராமப்புறங்களில் உருவாக்கப்படும் தனிநபர் மற்றும் குழு தொழில்களுக்கு தேவையான நிதியினை பெற்றுத்தர இணை மானிய நிதி திட்டத்தின் (Matching Grant Program) மூலமும் பிற நிதி நிறுவனங்களின் நிதி சேவை மூலமும் வழிவகை செய்யப்படும்.

இணை மானிய நிதி திட்டத்தின் மூலம் முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள், மகளிரால் நடத்தப்படும் தொழில்கள், தொழில் குழுக்கள், உற்பத்தியாளர் கூட்டமைப்புகள், மாற்றுத் திறனாளிகளால் மேற்கொள்ளப்படும் தொழில்கள் மற்றும் நிதி பெறுவதில் இடர்பாடுள்ள தொழில்களுக்கு நிதி ஆதாரத்தை ஏற்படுத்தி புதிய தொழில்கள் மற்றும் குழு தொழில்களுக்காக, நிதி நிறுவனங்களில் தேவைக்கேற்ப நிதி பெறுவதில் உள்ள இடைவெளியை போக்கி போதிய நிதி பெற வழிவகை செய்வதாகும்.

மேலும், இணை மானிய நிதி திட்டத்தின் மூலம் கடன் பெற்றவர்கள் கடன் தொகையை முறையாக திருப்பிச் செலுத்துவதை ஊக்கப்படுத்திடவும், நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் தொழில்களுக்கான கடன் தொகையினை துரிதமாக வழங்குவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டதாகும். இணை மானிய நிதி

திட்டத்தில், தொழில்களுக்கு கடன் வழங்கும் வங்கிக்கு (Participating Financial Insitution) கடன் தொகையில் 30% நிதி திட்டத்தின் மூலம் விடுவிக்கப்பட்டு வங்கி இருப்பில் வைக்கப்படும். கடன் பெற்ற நபர் மற்றும் குழுக்கள் முறையாக 70% கடனை திருப்பிச் செலுத்திய பின்பு மீதமுள்ள 30% திட்ட நிதியினை வங்கிக் கடனுக்கு ஈடாக செலுத்தி எஞ்சிய கடன் தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு பெற முடியும்.

புதுமையான திட்டங்களுக்கு ஆதரவு

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியில் உள்ள சவால்களை எதிர் கொள்வதற்காக தொழில் நுட்பம், புதுமை மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை பயன்படுத்தி பெரும் மாற்றத்தை தரத்தக்க சிந்தனைகளை வடிவமைத்து, மேம்படுத்தி நிறைவேற்றும் முயற்சிகளுக்கு தமிழ்நாடு ஊரகப் புத்தாக்க திட்டம் உதவி செய்யும்.

இ. திறன் வளர்ப்பு மற்றும் வேலை வாய்ப்புகள்

நிலையான ஊதிய மற்றும் சுய வேலை வாய்ப்பினை உருவாக்கவும், வேளாண் மற்றும் அதை சாா்ந்த நடவடிக்கைகளுக்கு, சந்தைக்கு ஏற்ப திறன்கள் மற்றும் தொழில் முனைவோரை உருவாக்குவதன் மூலம் கிராமப்புறங்களில் உள்ள இளைஞா்களுக்கு திறன் வளா்ப்பு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புகள் இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் 80,000 இலக்கு இளைஞா்களுக்கு நேரடியாக தொழிற்திறன் மேம்பாட்டிற்கான பயிற்சியினை வழங்கிட இலக்கு நிா்ணயிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இச்செயல்பாட்டில் மொத்த பயனாளிகளில் 40% பெண்களாக இருக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

ஈ. திட்ட கண்காணிப்பு, தகவல் தொடர்பு, தொழில் நுட்பம் மேம்பாடு

மேல்கூறிய அனைத்து திட்ட செயல்பாடுகளை மேற்கொள்ள மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறையை மேம்படுத்துதல், விரைவாக நிறைவேற்றும் செயல்முறையினை உருவாக்குதல், நிதி மேலாண்மை, மனிதவள ஆதாரங்களை வழங்குதல், திட்ட நிா்வாகம், சமூக சுற்றுசூழல், பழங்குடியினரின் சமூகப் பாதுகாப்பு மற்றும் தகவல், தொடா்பு தொழில் நுட்பத்தை ஏற்படுத்தி திட்ட மேலாண்மையின் மூலம் மாவட்டம் மற்றும் வட்டார அளவில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் 24 மாவட்ட திட்ட செயலாக்க அலகுகளைக் கொண்டு (தேனி மற்றும் கரூா் மாவட்டங்கள் முறையே மதுரை, திருச்சி மாவட்டங்களுடன் இணைந்து செயலாற்றும்) மாவட்ட செயல் அலுவலா் தலைமையில் 26 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில் வட்டார அலகுகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளா்ச்சி பெறத்தக்க, லாபம் தரத்தக்க சாத்திய கூறுகள் மிக்க உற்பத்திப் பொருட்கள் மற்றும் தொழில் வகைகளை கண்டறிந்து கிராமப்புறத்தில் உள்ள விவசாயிகள், மகளிா், பழங்குடியினா், ஆதிதிரவிடா்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் போன்ற பயனாளி களும் இதுபோன்ற தகுதியான தொழில்களை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வறுமையை போக்கும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்...!

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை என்றே
வணங்கி மகிழ்ந்தாா் மகாகவி பாரதி...!

என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் அயல்நாட்டில்?
கேள்விகளால் தட்டி எழுப்பினா் கவிஞரெலாம்;

வளமும் உண்டு... வயலும் உண்டு...
மலையும் உண்டு... நீலக் கடலும் உண்டு – எனில்
வாழ்வும் இங்குண்டு என்றுணா்த்த
உதித்ததிந்த நல்திட்டம் அதுவே நமது
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்...!

வெள்ளத்தனைய மலா் நீட்டம் ஆங்கே
உன் முதலீட்டளவு உன் ஏற்றம் என்பதை
நுண், குறு, சிறு தொழில் முனைவு உணா்த்திடும்
நல்லதொரு திட்டம் நமது
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்...!

ஊா் கூடினால் இங்கு தேரொன்று ஓடும்
உற்பத்தியாளா் கூடினால் கூட்டமைப்பு ஆகும்...!
அதனால் உற்பத்தியாளா் வாழ்வு உயரும்
அவா்தம் குடும்பத்தில் மகிழ்ச்சி மலரும்...!

கூடித் தொழில் கோடி நன்மை-என்பதை
உணா்த்திடுமே தொழில் குழுக்கள்:
நமது இளைஞா்களுக்கு
நமது பகுதியிலேயே தொழில்கள்: – அதில்
பிற துறை கொண்டும் ஊரின்
தேவைத் திறன் கொண்டும்
திறன் வளா்ப்புப் பயிற்சியுடனே நல்
வேலைவாய்ப்புப் பெருகிடவே வந்ததொரு திட்டம் – நமது
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்...!

ஓடி வாருங்கள்:
தொழில்களில் புதுமை புகுத்திடுவோம் – அதற்கு
சரியான நிதியினைப் பெற்றிடுவோம்;
உயரங்களைக் கடந்திடுவோம்...!

கூடி வாருங்கள்;
தொழில்களை வளா்த்திடுவோம்;
உற்பத்தியினை பெருக்கிடுவோம்;
வளங்களை காத்திடுவோம்...!

நாட்டின் வளா்ச்சியினை உயா்த்திடுவோம் – நமது
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் வழியில்...!

-ஆரோன் ஜோஸ்வா ரூஸ்வெல்த்,
புதுக்கோட்டை மாவட்ட செயலாக்க அலுவலா்

குளிர் காலத்தில் ஏற்படும் உடல் பிரச்சனைகளைத் தடுக்கும் வழிகள்...

வெப்பத்துக்குப் பழக்கப்பட்ட நமது உடல் குளிரைச் சமாளிக்கத் தடுமாறும். காலநிலை மாறுவதால், சுவாசப் பிரச்சனை, காய்ச்சல், தோல் வறட்சி போன்ற உடல்நலப் பிரச்சனைகள் ஏற்படக்கூடும். பனிக்காலத்தில் நமது உடலை நோயின்றி பாதுகாப்பதற்கான வழிமுறைகளை பார்க்கலாம்.

குளிர்காலத்தில் உடலுக்குக் கதகதப்பு அளிக்கும் சில உடற்பயிற்சிகள், நிமிர்வது, குனிவது போன்ற அசைவுகளைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். இதனால், குளிரினால் ஏற்படும் உடல் மற்றும் தசை வலி நீங்கும்.

எளிதில் செரிக்கக் கூடிய பச்சைக் காய்கறிகள் மற்றும் நார்ச்சத்து மிகுந்த பீன்ஸ், முருங்கைக்காய் போன்றவற்றை அதிக அளவில் சாப்பிடலாம். அசைவ உணவுகள் எளிதில் ஜீரணமாகாது என்பதால் அதனைக் குறைத்துக் கொள்வது நல்லது.

குளிக்கச் செல்லும் முன் தேங்காய் எண்ணெய் அல்லது ஆலிவ் எண்ணெயை உடலில் தேய்த்து மசாஜ் செய்தால், சருமம் வறண்டு போகாமல் ஆரோக்கியமாக இருக்கும். கற்றாழையைக் கூழாக அரைத்து முகம் மற்றும் உடலில் தேய்த்தாலும் சருமம் மிருதுவாக இருக்கும். ஒவ்வாமை மற்றும் சுவாசப் பிரச்சனை உடையவர்கள் கற்றாழை க்ரீம் பயன்படுத்தலாம்.

குளிர்காலத்தில் வெந்நீர் குளியல் நல்லது. அதிக சூடான தண்ணீரில், அதிக நேரம் குளித்தால் சருமத்தில் அதிக வறட்சி

ஏற்படும். அதனால் வெதுவெதுப்பான சூட்டில் குளிக்க வேண்டும்.

பனிக்காலத்தில் தாகம் குறைவாக ஏற்படும். அதனால் தண்ணீர் குடிப்பதைத் தவிர்த்தால் உடலில் உள்ள நீர்ச்சத்து குறைந்து, வேறு பிரச்சனைகளை உருவாக்கும். எனவே, ஒரு நாளைக்கு போதுமான அளவில் தண்ணீர் அவசியம் குடிக்க வேண்டும்.

அதிக குளிர் காணப்படும் நேரத்தில் உடலுக்குக் கதகதப்பு தரும் கம்பளி ஆடைகளை உடுத்த வேண்டும். இந்த ஆடைகள் குளிர்காலத்தில் வரும் நடுக்கத்தைக் குறைக்கும். கை, கால்கள், மூக்கு, காது பகுதியையும் கதகதப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரைகள் ஆஸ்துமா, மூச்சுத் திணறல் மற்றும் சுவாச நோய்களால் அவதிப்படுபவர்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி தங்களுக்கான மாத்திரை மருந்துகளை எப்போதும் உடன் வைத்துக் கொள்ள வேண்டும்.

மேற்கூறியுள்ளபடி செயல்பட்டால் குளிர்காலத்தில் ஏற்படும் உடல் நலப் பிரச்சனைகளை பெரிதும் தவிர்க்கலாம்.

ஹெல்மெட் அணிவோம்! பாதுகாப்புடன் பயணிப்போம்!!

'எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்' என்பது பழமொழி. நம் உடல் உறுப்புகளை செயல்படுத்தும் ஒட்டு மொத்த கண்ட்ரோல் நம் தலையில் இருக்கக்கூடிய மூளையாகும். இதன் மொத்த எடை 1.5 கிலோ ஆகும். 100 கிலோவிற்கு மேல் உள்ள மனிதனுக்கும் இதே அளவுதான். தொலைநோக்குப் பார்வையுடன் சிந்திக்கும் திறன், அனுமானித்தல், கேட்டறிதல், செயல்படுத்துதல், கட்டளையிடுதல் போன்ற பல்வேறு விதமான செயல்பாடுகளை செய்வது இந்த மூளைதான்.

இந்த மூளையை காப்பாற்ற வேண்டிய கடமையும், பொறுப்பும் நம் அனைவருக்கும் தலையாய கடமையாகும். இந்த மூளை அதிகமாக பாதிக்கப்படுவது சாலை விபத்தில் தான்.

50 சதவீத சாலை விபத்துகளுக்கு ஓட்டுனரின் கவனக்குறைவு, மது அருந்தி வாகனம் ஓட்டுதல், தலைக்கவசம் அணியாமல் வாகனம் ஓட்டுவது போன்றவைதான் முக்கிய காரணங்களாகும். ஆகவே வருமுன் காப்பது சாலை விபத்தினால் ஏற்படும் மூளைக்காயத்திற்கு சாலச்சிறந்தது. சாலை விபத்து முக்கியமான உயிர்க்கொல்லி நோயாக உலகளவில் உருவெடுத்துக் கொண்டிருக்கிறது.

எதிர்பாராத விதமாக விபத்தில் சிக்கியவரை கழுத்து முதல் முதுகெலும்பு வரை வளையாமல் நேராக படுக்க வைத்து மருத்துவமனைக்கு கொண்டுச் செல்ல வேண்டும். சாலை விபத்தில் சிக்கி சுவாச பிரச்சனை உள்ளவர்களுக்கு வாய் வழியாக நுரையீரலுக்கு மூச்சுக்குழாயை செலுத்த வேண்டும். அதன் மூலம் மருத்துவமனை வரும் வரை செயற்கை சுவாசம் அளிக்க வேண்டும். அதனால் உடலின் பல்வேறு பகுதிகளுக்கும், மூளைக்கும் ஆக்சிஜன் போதுமான அளவு கிடைக்கும். ரத்த அழுத்தம் சரியான விகிதத்தில் இருக்க வாய்ப்பு உள்ளது.

என்னதான் மருத்துவத்துறை முன்னேறினாலும் சாலையில் செல்பவர்கள் சாலை விதிகளை மதித்து செல்லுதல், ஹெல்மெட் அணிதல், மது அருந்தாமல் வாகனம் ஓட்டுதல் போன்ற கொள்கைகளை தவறாமல் கடைபிடித்து வந்தால் வெகுவிரைவில் சாலை விபத்தில் சிக்கி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையை வெகுவாக குறைக்கலாம்.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (73,500 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

21-ம் ஆண்டில் வெற்றிநடை போடும்

முற்றம் இதழ்

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!

முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!

முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு	ரூ. 180
இரண்டு ஆண்டு	ரூ. 360
மூன்று ஆண்டு	ரூ. 540

விளம்பரக் கட்டணம்

அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம்.
சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும். பரிசும் வழங்கப்படும்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
மேலாளர், முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், 3வது மாடி,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 1st Week of the every month

सत्यमेव जयते
Goverment Of India

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ்

கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம்

100%

வேலைவாய்ப்புக்கு

044-3047 8047

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

DEEN DHAYAL UPADHYAYA GRAMEEN KAUSHALYA YOJANA (DDU-GKY)

TAMIL NADU STATE RURAL LIVELIHOODS MISSION,
Tamil Nadu Corporation for Development of Women,
Mother Theresa Womens Complex - 3rd floor, Valluvar Kottam High Road,
Nungambakkam, Chennai - 600 034. Phone : 91-44-2817 3415
E-mail : ddugkytn2016«gmail.com / cooddugkytn«gmail.com